# பொறியாளர்

Website : www.aoeaeatnpwd.org

## (PORIYAALAR)

தமிழ் மற்றும் ஆங்கில மாத இதழ்

பிப்ரவரி 2018
February 218

Tamil and English Magazine

கட்டடம் - 09, Volume - 09, அடுக்கு - 5, Issue - 5

தனி பிரதி ரூ.10/- Price Rs.10/-, ஆண்டு சந்தா - ரூ.130/-

**15.02.2018 அன்று சென்னையில் நடைபெற்ற "மாபெரும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்"**










**பொறியாளர் சங்கம் மற்றும் உதவிப் பொறியாளர் சங்கம்**
**தமிழ்நாடு பொதுப்பணித்துறை**
**சேப்பாக்கம், சென்னை– 600 005**
தொலைபேசி : 044 – 2851 5445
பொறியாளர் இராமலிங்கம் இல்லம் : 044–2854 4043,
e-mail : aoe_aea@yahoo.com, gsaoe.pwd@gmail.com

## 15.02.2018 அன்று சென்னையில் நடைபெற்ற "மாபெரும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்"














☞ உள்ளே...

| | | | |
|---|---|---|---|
| ☞ பொதுச் செயலாளர் மடல் | 4 | ☞ Federation News | 24 |
| ☞ சங்க கோரிக்கைக் கடிதங்கள் | 8 | ☞ ENGIBEF | 41 |
| ☞ 15.02.2018 கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டப் புகைப்படங்கள் | 7 | ☞ Wedding Greetings | 42 |
| ☞ கிளைச் சங்க செய்திகள் | 13 | ☞ Retirement List | 42 |
| ☞ 3rd PEC Minutes | 18 | ☞ Special Legal fund for pay case | 43 |
| ☞ Know your Chief Engineer | 21 | ☞ Special Contribution | 44 |
| ☞ பதவி உயர்வு ஆணைகள் | 22 | ☞ ஆலோசனைக் கூட்டம் 15.02.2018 | 46 |
| ☞ E-in-C சுற்றறிக்கை | 23 | ☞ CEC Circular Meeting | 48 |


*Editorial*

## 2007ஆம் ஆண்டு உதவிப் பொறியாளர்களுக்கு பதவி உயர்வு எட்டாக்கனியா?

- கடந்த 2014ஆம் ஆண்டிற்கு பிறகு நமது உதவிப் பொறியாளர்களுக்கு பதவி உயர்வு அளிக்கப்படவில்லை. ஆனால், நமது நேரடி நியமன உதவிப் பொறியாளர்களின் பதவி உயர்விற்கு எதிராகவும், விதிகளுக்கு மாறாகவும் அரசாணை எண்.155ம் அதனைத் தொடர்ந்து தலைமைப் பொறியாளர்களின் செயல்முறை ஆணைகளும் வெளியிடப்பட்டன. இந்த அரசாணை மற்றும் செயல்முறை ஆணையை எதிர்த்து தொடரப்பட்ட வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில், தொடர்ந்து ஏற்படும் உதவிச் செயற்பொறியாளர் காலிப்பணியிடங்களை கருத்தில் கொண்டு, உதவிச் செயற்பொறியாளர் பதவிகளை நிரப்ப முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்) மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.
- தற்போது, துறையில் காலியாக உள்ள சுமார் 200 உதவிச் செயற் பொறியாளர் பணியிடங்களால் நமது துறையினரால் நிறைவேற்றப்படும் 30%க்கும் மேற்பட்ட அரசின் திட்டப்பணிகள் தொய்வடையும் என்பது வருத்தமானதொன்று. கடந்த ஆண்டு மார்ச் மாதமே 215 காலிப் பணியிடங்களுக்கு அரசின் ஒப்புதல் பெறப்பட்டும் நீதிமன்ற வழக்குகளைக் காரணம் காட்டி பெயர் பட்டியல் தயாரிக்கும் பணி தொடர்ந்து தவிர்க்கப்பட்டு வந்தது.
- நமது தொடர்ச்சியான வலியுறுத்தலின் பேரில் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களால் உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு பெயர்பட்டியல் தயாரிக்கும் இத்தருணத்தில், சிறப்பு தமிழ்நாடு பொறியியல் பணி விதிகளையும், உச்ச நீதிமன்ற ஆணையையும் கருத்தில் கொண்டு பதவி உயர்வுபட்டியல் தயாரிக்கப்பட வேண்டும். இதன்படி, விதிக்கு மாறாக பணிமாற்றத்தின் மூலமாக உதவிப் பொறியாளர்களாக மாற்றம் செய்யப்பட்ட தொழில்நுட்ப உதவியாளர்கள் உதவிச் செயற் பொறியாளர் பதவி உயர்வு பெயர் பட்டியலில் இடம் பெற கூடாது என்று முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்) மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களை நேரிடையாகவும், கடிதங்களின் வாயிலாகவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.
- இதற்கிடையில் தொழில்நுட்ப உதவியாளராக இருந்து உதவிப் பொறியாளராக மாற்றம் பெற்றவர்களுக்கு கமுக்க அறிக்கையினை சரிபார்த்து அனுப்பக் கேட்டுக்கொள்ளப்பட்டது ஏனென்று தெரியவில்லை. இவ்வாறு பணி விதிகளுக்கு முரணாக தலைமைப் பொறியாளர் செயல்படுவதற்கு புற அழுத்தங்கள் ஏதேனும் காரணமாக இருக்குமோ என்ற அச்சம் ஏற்படுகிறது.
- இந்தச் சூழலில் தற்போது உள்ள காலிப்பணியிடங்களுடன் இனி ஏற்பட இருக்கும் காலிப்பணியிடங்களையும் சேர்த்து மொத்த உதவிச் செயற் பொறியாளர் காலிப்பணியிடங்களுக்கு உச்சநீதிமன்ற தீர்ப்புக்கும், விதிகளுக்கும் உட்பட்டு அழுத்தங்களுக்கு வளைந்து கொடுக்காமல் உதவிச் செயற் பொறியாளர் பதவி உயர்வினை முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்) மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்கள் விரைவில் பதவி உயர்வு பட்டியல் தயாரித்து அரசுக்கு அனுப்பி அரசின் ஒப்புதலை பெறும்படி கேட்டுக்கொள்கிறோம்.

**- ஆசிரியர்**

19.02.2018

## பொதுச் செயலாளர் மடல்

**பேரன்பிற்கினியீர், பெருமதிப்பிற்குரியீர், வணக்கம்.**

- 15.02.2018 அன்று **தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு** அரசுத் துறைகளில் பணிபுரியும் பொறியாளர்களுக்கு பிற அரசுத் துறை ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ஊதிய விகிதங்கள் போல 7வது ஊதியக் குழு வழங்க வேண்டும் என்பது உட்பட 5 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி, சென்னை சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை அருகே **மாபெரும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்** நடைபெற்றது. அனைத்து துறைகள், வாரியங்கள், கழகங்களில் பணியாற்றிவரும் 5000க்கும் மேற்பட்ட பொறியாளர்கள் கலந்துகொண்டனர். தமிழகம் முழுவதிலும் இருந்த நமது பொறியாளர்கள் மிகத் திரளாக கலந்து பிரம்மாண்டப்படுத்தியதற்கு நமது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம்.
- **மாபெரும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்** மிகச் சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த தலைமைச் சங்க பொறியாளர்கள், கிளைச் சங்க பொறுப்பாளர்கள், மற்றும் மண்டல அளவில் பொறுப்பேற்று பணியாற்றிய அனைத்து பொறியாளர்களுக்கும் நம்முடைய நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம்.
- **மாபெரும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில்** கலந்துகொண்டு வாழ்த்துத் தெரிவித்த நமது சங்கப் பொறுப்பாளர்களுக்கும், பிற சங்கங்களின் பொறுப்பாளர்களுக்கும், மூத்த பொறியாளர்களுக்கும் மற்றும் இந்திய பொறியாளர் கூட்டமைப்பின் முன்னாள் மற்றும் இந்நாள் நிர்வாகிகளுக்கும் நமது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம்.
- கூட்டமைப்பு நிர்வாகிகளை அழைத்து அரசு நமது நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவது குறித்து பேச வேண்டுமென்று ஆர்வமாக உள்ளோம்.
- மேற்படி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு முன்பு தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பின் மண்டல அளவிலான ஒருங்கிணைப்புக் கூட்டம் 21.01.2018 அன்று கோயம்புத்தூரிலும், 10.02.2018 அன்று சேலத்திலும், 11.02.2018 அன்று சென்னையிலும் நடைபெற்றது. அதன் நடவடிக்கைகள் குறித்து பிறிதொரு பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளன.
- பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ள இரண்டு தலைமைப் பொறியாளர்களுக்கும் நாம் நமது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.
- தலைமைப் பொறியாளராக பதவி உயர்வு பெற்ற பொறி.K.பத்மநாபன், அரசு சிறப்பு செயலர் அவர்களை நம் சங்க பொறுப்பாளர்கள் நேரில் சந்தித்து நம்முடைய நல்வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொண்டோம்.
- கண்காணிப்புப் பொறியாளர் (மின்) பதவி உயர்வு, மீதமுள்ள ஒருவருக்கும் அளிக்கப்பட்டுள்ளது. கண்காணிப்புப் பொறியாளராக (மின்னியல்) பதவி உயர்வு பெற்றுள்ள பொறி.C.ஜெயமனி மௌலி, முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) சென்னை அலுவலகத்தில் இணைத் தலைமைப் பொறியாளர் (மின்) ஆக பணியில் சேர்ந்துள்ளார். நம் வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் நேரில் சென்று தெரிவித்தோம்.

- கண்காணிப்புப் பொறியாளர் (மின்) மற்றும் தலைமைப் பொறியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கிய **மாண்புமிகு தமிழக முதல்வர்**, மற்றும் உறுதுணையாக இருந்த **அரசு முதன்மைச் செயலர், பொதுப்பணித்துறை மற்றும் முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), தலைமைப் பொறியாளர் (பொது)** ஆகியோர்களுக்கு நமது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம்.
- இந்த வருட துவக்கத்தில் உதவிப் பொறியாளர் (சிவில்) 2013-14ஆம் ஆண்டிற்கான 95 காலியிடப்பணிகளும், உதவிப் பொறியாளர்கள் (மின்) 45 காலிப்பணியிடங்களும் நம் துறைக்கு தெரிவு செய்திட உரிய அரசாணை பிறப்பிக்கப்பட்டு, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்துக்கு அனுப்பப்படவுள்ளது. மேலும், 2014-2015 முதல் 2016-17ஆம் ஆண்டிற்கான 250க்கும் மேற்பட்ட உதவிப் பொறியாளர் (சிவில்) காலிப்பணியிடங்களுக்கு உரிய அரசாணை வழங்கி தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்திட தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது.
- உதவிச் செயற் பொறியாளர் (சிவில்) பதவி உயர்வு, தகுதியானவர்களுக்கு விரைவில் வழங்கிட முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), தலைமைப் பொறியாளர் (கட்டடம்) சென்னை மண்டலம் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களிடம் தொடர்ந்து வலியுறுத்திவருகிறோம்.
- செயற் பொறியாளர் (சிவில்) பதவி உயர்வுப் பட்டியல் அரசின் ஒப்புதலை எதிர்நோக்கியுள்ளது, விரைவில் ஒப்புதல் பெறப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறோம்.
- 2017-18ஆம் ஆண்டிற்கான கண்காணிப்புப் பொறியாளர் பதவி உயர்வு பட்டியலில் மீதமுள்ள ஏழு செயற் பொறியாளர்களுக்கு, கண்காணிப்புப் பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்க அரசுக்கு அனுப்பப்படவுள்ளது. விரைவில் பதவி உயர்வு ஆணை வழங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறோம்.
- பொறியாளர் சங்கம் மற்றும் உதவிப் பொறியாளர் சங்கத்தின் தலைமைச் சங்க செயற் குழு கூட்டம் 08.02.2018 அன்று நமது சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தின் நடவடிக்கை குறிப்புகள் பிறிதொரு பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.
- 15.02.2018 அன்று மாலை 2007ம் வருட உதவிப் பொறியாளர்களுடன் உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு தொடர்பாக ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.
- நம் சங்கத்தின் ஒருங்கிணைந்த மாநில மையச் செயற்குழுகூட்டம் 10.03.2018 (சனிக்கிழமை) வேலூரில் நடைபெறவுள்ளது. இதற்கான சுற்றறிக்கை இவ்விதழில் வெளியிடப்பட்டுள்ளது. மைய செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொண்டு தங்களின் மேலான கருத்துகளை தெரிவிக்கவும் கேட்டுக்கொள்கிறோம்.
- நமக்கு எதிர் உள்ள சவால்களை உங்களின் துணையுடன் வெற்றிக்கொள்வோம் என்று தெரிவித்துக்கொண்டு இத்துடன் இம்மடலை நிறைவு செய்கிறோம்.

மிக்க அன்புடன்...

**பொறிஞர். மு. தனசேகரன்**
பொதுச் செயலாளர், உதவிப் பொறியாளர் சங்கம்

**பொறிஞர். க. அன்பு**
பொதுச் செயலாளர், பொறியாளர் சங்கம்

## உறுப்பினர்களின் கவனத்திற்கு

சங்க மாத இதழ் உறுப்பினர்களுக்கு கிடைக்க ஏதுவாக தங்களது முகவரி, பதவிகளில் ஏதேனும் மாற்றம் இருப்பின் அதன் விவரத்தினை சங்க மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**Mail ID : aoe_aea@yahoo.com**

## பொறியாளர் உறுப்பினர்களுக்கு அன்பான வேண்டுகோள்

தற்போது நடத்தப்பட்டு வரும் வழக்குகள் தொடர்ந்து நடந்திட வழக்காடு செலவிற்காக பொறியாளர்கள் வழக்கு நிதியினை தாராளமாக அளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**AOE Legal Fund A/c.No.30096767382, State Bank of India, PWD Campus, Chepauk, Chennai-5.**

**Er.M.Manimaran & A.Ariharan**
Secretary Legal Affairs, AEA

**Er.K.Prabhakar & Er.S.Nagaraj**
Joint Secretary Legal Affairs, AOE

## For the kind Attention of our Member Engineers

- The new Membership Subscription as per the resolution of the General Body Meeting held on 11.11.2017 in Erode are as follows:-

| | |
|---|---|
| **Annual Member Subscription** | **Rs. 2000/-** |
| **Life Membership Spl. Subscription** | **Rs. 1000/-** |
| **Retired Engineers (For Poriyaalar Only)** | **Rs. 500/-** |

- We request our **Member Engineers** to pay the Subscription for the year 2018 and be a continuous member of our Association.

**Solicit your earnest Co-operation in this regard.**

**Er.D.Rajeshwar Babu**
Treasurer, AOE & AEA

**Er.K.Anbu**
General Secretary, AOE

பொறியாளர் இதழில் வெளியிட தொழில்நுட்ப கருத்துக்கள் உறுப்பினர்களிடமிருந்து வரவேற்கப்படும் என்று அறிவித்தும், உரிய கட்டுரைகள் கிடைக்கப்பெறவில்லை. உங்களுடைய மேலான தொழில்நுட்ப கட்டுரைகளை **gsaoe.pwd@gmail.com / aoe_aea@yahoo.com** என்ற மின்னஞ்சலுக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- ஆசிரியர்

## 15.02.2018 அன்று சென்னையில் நடைபெற்ற "மாபெரும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்"


Er.A.Veerappan


Er.P.Krishnamoorthy


Er.S.Ananth


Er.D.Arumugam


Er.Nagaraj (INDEF)


Er.Syed (INDEF)


Er.Chandsure (INDEF)


Er.Sasane (INDEF)


Er.P.Karthikeyan


Er.Muthu Ramalingam


Er.K.Jayanthi


Er.K.Apparsamy


Er.Natarajan


Er.Arasan


Er.Rajkumar


Er.A.Deepak


Er.Gandhi


Er.Mathimaran


Er.Selvam


Er.E.Sasidaran

## 15.02.2018 அன்று சென்னையில் நடைபெற்ற "மாபெரும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்"


Er.K.Panneer Selvam


Er.A.Venkatachalam


Er.S.Appavoo


Er.G.Balakrishnan


Er.Prakash


Er.Gnana Murugan










# தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு

அரசுத்துறைகள், வாரியங்கள், போக்குவரத்துக் கழகங்களில்
பணியாற்றும் பட்டதாரிப் பொறியாளர்களுக்கான பொது அமைப்பு

ஐந்து அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி

நாள்
15.02.2018
வியாழக்கிழமை
நேரம்
காலை
10.00 மணி

## மாபெரும் ஆர்ப்பாட்டம்

இடம் :
சென்னை
சேப்பாக்கம்
அரசு விருந்தினர்
மாளிகை

### ஐந்து அம்சக் கோரிக்கைகள்

1. ஒரு நபர் குழு பரிந்துரைத்து இன்றளவும் பெற்று வரும் ஊதியத்தின் அடிப்படையில் 7-வது ஊதியக் குழு ஊதியம் வழங்கிடுக!
2. காலங்காலமாக இருந்து வந்தது போன்று போக்குவரத்துக் கழகங்கள் வாரியங்களில் பணியாற்றும் பட்டதாரிப் பொறியாளர்களுக்கு, அரசுத் துறைப் பொறியாளர்களுக்கு இணையான ஊதியம் வழங்கிடுக!
3. காலமுறை பதவி உயர்வு வழங்கிடுக!
4. பொறியியல் சீராய்வுக்குழு அமைத்திடுக!
5. ஊரக வளர்ச்சித் துறையில் தலைமைப் பொறியாளர்கள் தலைமையில் முறையான பொறியியல் கட்டமைப்பை உருவாக்கிடுக!

### அமைப்புகள்

1. பொறியாளர் சங்கம், தமிழ்நாடு பொதுப்பணித்துறை
2. உதவிப் பொறியாளர் சங்கம், தமிழ்நாடு பொதுப்பணித்துறை
3. தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம்
4. தமிழ்நாடு மின்வாரியப் பொறியாளர் கழகம்
5. பட்டதாரிப் பொறியாளர்கள் சங்கம்,வேளாண்மைப் பொறியியல் துறை
6. பொறியாளர் சங்கம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
7. உதவிப் பொறியாளர் சங்கம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
8. தமிழ்நாடு மின் ஆய்வுத் துறை பொறியாளர் சங்கம்
9. பட்டதாரிப் பொறியாளர் சங்கம், சென்னை குடிநீர் வாரியம்
10. பொறியாளர் சங்கம் பெருநகர சென்னை மாநகராட்சி
11. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியப் பொறியாளர் சங்கம்
12. தமிழ்நாடு தலைமை கொதிகலன் ஆய்வாளர் பொறியாளர் சங்கம்
13. தமிழ்நாடு போக்குவரத்துக் கழகப் பொறியாளர் சங்கம்
14. தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை உதவிப் பொறியாளர் நலச்சங்கம்
15. தமிழ்நாடு தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கப் பொறியாளர் சங்கம்
16. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியப் பொறியாளர் நலசங்கம்
17. தமிழ்நாடு அரசு மோட்டார் வாகன பராமரிப்புத் துறை பொறியாளர் சங்கம்
18. தமிழ்நாடு மாநில சுகாதார போக்குவரத்துத் துறை பொறியாளர் சங்கம்
19. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய பட்டதாரி பொறியாளர் சங்கம்

---

## தமிழ் நாடு பொறியாளர் கூட்டமைப்பு

பொதுப்பணித்துறை வளாகம், சேப்பாக்கம், சென்னை - 600 005
தொ.பே.எண் : 044-28515445

**மாபெரும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் 15-02-2018 அன்று!**
**சென்னை சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளிகை அருகில்!!**

**அரசுத்துறைகள், வாரியங்கள், போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் பட்டதாரிப் பொறியாளர்களே!**

**நமது உரிமைகளைப் பாதுகாக்க,**
**பொறியாளர்கள் மாநில அரசின் இன்றியமையாத அங்கம் என்று உணர்த்துவதற்காக,**
**பட்டதாரிப் பொறியாளர்களே, அணி திரள்வீர்!!**

**நிர்வாகிகள், தமிழ்நாடு பொறியாளர் கூட்ட மைப்பு,சென்னை**



பொறி.K.பத்மநாபன், தலைமைப் பொறியாளர்/சிறப்புச் செயலர், பொதுப்பணித்துறை அவர்கள் தலைமைப் பொறியாளராக பதவி உயர்வு பெற்றதை முன்னிட்டு நமது சங்கத்தின் சார்பாக நேரில் சந்தித்து வாழ்த்துக்களை தெரிவித்தோம்.





பொறியாளர் சங்கத்தின் "பொறியாளர் நலநிதி" செயலாளர் பொறி.K.கருணாநிதி - பொற்செல்வி அவர்களின் மகள் K.ரேகா மற்றும் மணமகன் P.R.யுவராஜ் திருமணம் 22.01.2018 அன்று வேலூர் மாவட்டம், குடியாத்தத்தில் இனிதே நடைபெற்றது. வரவேற்பு 27.01.2018 அன்று சென்னையில் நடைபெற்றது. நமது சங்கப் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு மணமக்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

## Tamil Nadu Engineers Federation, Coimbatore Regional GeneralMeeting held on 21.01.2018




| | | | |
|---|---|---|---|
|  |  |  |  |
| Er.G.Saravanakumar | Er.K.Punithavel | Er.S.Gopalakrishnan | Er.M.Dhanasekaran |







Views of Gathering

## Tamil Nadu Engineers Federation, Salem Regional General Meeting held on 10.02.2018



Er.K.Anbu



Er.R.Prakasam



Er.S.Parthiban



Er.Murugesan



Er.K.Punithavel



Er.S.Gopalakrishnan



Er.M.Dhanasekaran



Er.D.Rajeshwar Babu





Views of Gathering

## விருதுநகர் கிளை

பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளர் சங்க விருதுநகர் கிளையின் புத்தாண்டு கூட்டம் 29.12.2017 அனறு பொறியாளர் இல்லம் விருதுநகரில் பொறிஞர்.மு.அந்தோணி துரை, செயற்பொறியாளர் அவர்கள் தலைமையில், பொறிஞர்.து.தேவசேனன், செயற்பொறியாளர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. முன்னதாக பொறியாளர் சங்க 2018-ம் ஆண்டிற்கான நாட்குறிப்பேடு மற்றும் மாதநாட்காட்டி பொறிஞர். து.தேவசேனன், செயற்பொறியாளர் அவர்கள் வெளியிட பொறிஞர்.பொ.ஜெயராமன், கண்காணிப்பு பொறியாளர் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

இக்கூட்டத்திற்கு பொறிஞர்.அ.கணேசன் செயற்பொறியாளர் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். அன்னார் தனது உரையில் பொறியாளர்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்ததோடு பொறியாளர்களின் ஊதியம் தொடர்பான வழக்கு உட்பட ஏனைய வழக்குகளை விரைந்து முடித்திட ஏதுவாக உறுப்பினர் பொறியாளர்கள் அனைவரும் வழக்கு நிதியை விரைந்து வழங்கிடுமாறு கேட்டுக் கொண்டார்.

பொறிஞர்.மு.அந்தோணித்துரை செயற்பொறியாளர் அவர்கள் தனது வாழ்த்துரையில் பொறியாளர்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்ததோடு பொறியாளர்களின் புதிய ஊதியம் தொடர்பான தனது கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்.



2018 பொறியாளர் நாட் குறிப்பேடு கண்காணிப்பு பொறியாளர் அவர்கள் பெற்றுக் கொள்ளுதல்



2018 பொறியாளர் மாதாந்திர நாட்காட்டியை செயற் பொறியாளர் அவர்கள் பெற்றுக் கொள்ளுதல்



29.12.2017 அன்று விருதுநகர் கிளையில் நடைபெற்ற பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளர் சங்க புத்தாண்டுக் கூட்டம்

பொறிஞர்.து.தேவசேனன், செயற்பொறியாளர் தனது வாழததுரையால உறுப்பினர்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார். அதன்பின் உரையாற்றிய விருதுநகர் கிளை பொறியாளர் சங்க செயலாளர் பொறிஞர் ம.பவழக்கண்ணன் அவர்கள் தனது உரையில் உறுப்பினர் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்ததோடு 06.01.2018 அன்று மதுரையில் நடைபெறவுள்ள பொறியாளர் கூட்டமைப்பின் கூட்டத்தில் பொறியாளர் அனைவரும் திரளாகக் கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்தார்கள்.

மேலும் கீழ்க்கண்ட பொறியாளர் உறுப்பினர்கள் அனைவரும் புத்தாண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

1.சு.இராஜா, உதவிசெயற்பொறியாளர்
2.ச.கலைச்செல்வி, உதவிசெயற்பொறியாளர்
3.எம்.மகேஸ்வரி, உதவிசெயற்பொறியாளர்
4.கி.அழகிரிசாமி, உதவிசெயற்பொறியாளர்
5.மு.இரத்தினவேல், செயலாளர், உதவிப்பொறியாளர் சங்கம்
6.ச.பொன்ராஜ், செயற்குழு உறுப்பினர் (மைய உதவிப்பொறியாளர் சங்கம்)
7.சி.சுப்பிரமணி, உதவிபொறியாளர்
8.ஆர்.சந்திரமோகன், உதவிபொறியாளர்

இதன்பின் பொறிஞர் இரா.கௌதமன், பொருளாளர், பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளர் சங்கம், விருதுநகர் அவர்கள் நன்றியுரை கூற கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

இக்கூட்டமுடிவில் பொறியாளர்கள் அனைவருக்கும் 2018-ம் ஆண்டிற்கான நாட்குறிப்பேடு மற்றும் மாதாந்திர நாட்காட்டி வழங்கப்பட்டது.

**பொறி.S.ரத்தினவேல்**
செயலாளர், உதவிப் பொறியாளர் சங்கம்,

**பொறி.M.பவழக்கண்ணன்**
செயலாளர், பொறியாளர் சங்கம்,

## திருநெல்வேலி கிளை

திருநெல்வேலி கிளையின் பொதுக்குழுக் கூட்டம் 03.01.2018 அன்று மாலை 7.00 மணி அளவில் நெல்லை பொறியாளர் இல்லத்தில், பொறியாளர் சங்க தலைவர் பொறி.H.ஆசைத்தம்பி, அவர்கள் தலைமையில் நடைபெற்றது. உதவிப் பொறியாளர் சங்க செயலாளர் பொறி.S.பேச்சிமுத்து அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

கூட்டத்தில் திருநெல்வேலி கிளை பொறியாளர் சங்க முன்னாள் செயலாளரும் மூத்தப் பொறியாளர் சங்க திருநெல்வேலி கிளை செயலாளருமான பொறி.N.K.மாதவராஜ் கணேசன் அவர்கள் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டார்.

கூட்டத்தில் கிளை பொறியாளர் சங்க செயலாளர் பொறி.S.பழனிவேல் அவர்கள் மையச் சங்க செயல்பாடுகள், பதவி உயர்வு பட்டியல்களின் தற்போதைய நிலை, வழக்குகள் குறித்த விபரங்கள் மற்றும் பொறியாளர்களுக்கு 7வது ஊதியக்குழுவில் ஒரு நபர் குழுவால் வழங்கப்பட்ட ஊதிய விகிதத்திற்கு நிகரான ஊதியம் பெற பொறியாளர் கூட்டமைப்பு மூலம் மையச் சங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட பொறியாளர்கள் தங்களது கருத்துக்களை எடுத்துரைத்தனர்.

பொறி.V.வேலையா, உ.செ.பொ
பொறி.S.திருமலைக்குமார், உ.செ.பொ
பொறி.P.கோமதிநாயகம், உ.செ.பொ
பொறி.R.பாஸ்கர், செ.பொ
பொறி.M.காவேரிகணேசன், உ.செ.பொ
பொறி.S.பிரேமலதா, உ.செ.பொ
பொறி.W.டாப்சன் பர்னபாஸ், து.க.பொ
பொறி.S.சந்திரகலாதரன், மே.பொ

சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட பொறி.N.K.மாதவராஜ் கணேசன் அவர்கள் தனது உரையில் பொறியாளர்களுக்கு ஒரு நபர் குழுவால் வழங்கப்பட்ட ஊதியத்திற்கு நிகரான ஊதியம் மற்றும் 2007ஆம் ஆண்டு தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட உதவிப் பொறியாளர்களின் பதவி உயர்வு ஆகியவற்றுக்கு இந்த ஆண்டு உரிய தீர்வு கிடைக்கும் என நம்பிக்கை தெரிவித்தார். மேலும் 26.11.2017 அன்று மூத்தப் பொறியாளர் சங்கம் சார்பில் நடைபெற்ற நீர்வளக் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், கருத்தரங்கினை சிறப்பாக நடந்திட ஒத்துழைப்பு வழங்கிய பொறியாளர்களுக்கும் நன்றியினை தெரிவித்தார்.

கிளை பொறியாளர் சங்க தலைவர் பொறி.H.ஆசைத்தம்பி, அவர்கள் தனது உரையில் 7வது ஊதியக்குழுவில் ஒரு நபர் குழுவால் வழங்கப்பட்ட ஊதிய விகிதத்திற்கு நிகரான ஊதியம் பெறுவதற்கு பொறியாளர் கூட்டமைப்பு மூலம் மையச் சங்கம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு தரும்படி வேண்டினார். மேலும் ஊதியக் குறைப்பு தொடர்பாக உயர்நீதி மன்றம் மற்றும் உச்சநீதி மன்றம் ஆகியவற்றில் நடைப்பெற்றுவரும் வழக்குகளை திறம்பட நடத்திட தாராளமாக வழக்கு நிதி வழங்கிட உறுப்பினர்களை கேட்டுக் கொண்டார்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1) தலைமைப் பொறியாளர் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர் பதவி உயர்வு பட்டியல்களுக்கு ஒப்புதல் பெற நடவடிக்கைகள் மேற்கொண்ட மையச் சங்கத்திற்கு இக்கிளைச் சங்கம் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறது. பதவி உயர்வு பட்டியலில் இடம் பெற்றுள்ள பொறியாளர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறது.
2) செயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியல் மற்றும் 2007 ம் ஆண்டு தேர்வு செய்யப்பட்ட உதவிப் பொறியாளர்களின் பதவி உயர்வுக்கான பட்டியல் ஆகியவற்றுக்கு விரைந்து நடவடிக்கைகள் மேற்கொண்டு ஒப்புதல் பெற இக்கிளைச் சங்கம் வலியுறுத்துகிறது.
3) 17.12.2017 அன்று பொறியாளர் கூட்டமைப்பு சார்பில் நெல்லையில் நடைபெற்ற மண்டல அளவிலான ஒருங்கிணைப்பு கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்த பல்வேறு துறைகள்,வாரியங்கள் மற்றும் கழகங்களை சார்ந்த பொறியாளர்கள் மற்றும் கூட்டம் சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு வழங்கிய கூட்டமைப்பின் நிர்வாகிகளுக்கும் இக்கிளைச் சங்கம் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறது.
4) பொறியாளர்கள் ஒரு நபர் குழுவால் வழங்கப்பட்ட ஊதிய விகிதத்திற்கு நிகரான ஊதியம் பெற்றிட பொறியாளர் கூட்டமைப்பு முன்னெடுக்கும் போராட்டத்தில் இக்கிளைச்சங்க உறுப்பினர்கள் பெருந்திரளாக கலந்து கொள்வது என தீர்மானிக்கப்பட்டது.
5) வழக்குகளை திறம்பட நடத்திட உறுப்பினர்கள் அனைவரும் தாராளமாக வழக்கு நிதி வழங்கிட கிளை உறுப்பினர்களை கேட்டுக்கொள்வது என தீர்மானிக்கப்பட்டது.

நிறைவாக கிளைச் சங்க பொருளாளர் பொறி. மு.கார்த்திகேயன் அவர்கள் நன்றியுரை நிகழ்த்த நாட்டுப்பண்ணுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

**பொறிஞர்.S.பேச்சிமுத்து,**
செயலாளர், உதவி பொறியாளர் சங்கம்

**பொறிஞர்.S.பழனிவேல்,**
செயலாளர், பொறியாளர் சங்கம்

## திருச்சி கிளை

பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் சங்க புத்தாண்டு கலந்துரையாடல் கூட்டம் 02.01.2018 அன்று மாலை 6.15 மணியளவில் திருச்சி, பொறியாளர் நாச்சிமுத்து இல்லக் கூட்ட அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு திருச்சி கிளைச் சங்கத்தின் புரவலர்கள் பொறி.K.S.அப்துல் ரஷீத் மற்றும் பொறி.K.பிரபாகர் ஆகியோர் தலைமையேற்றார்கள். பொறி.J.ரபீந்தர், தலைவர், பொறியாளர் சங்கம் அவர்கள் முன்னிலை வகித்தார்.

இக்கூட்டத்தில் 2018ஆம் ஆண்டிற்கான குறிப்பேட்டினை பொறி.K.S.அப்துல் ரஷீத் புரவலர் திருச்சி கிளை அவர்கள் வெளியிட பொறி.B.ரவிச்சந்திரன், கண்காணிப்புப் பொறியாளர், நடுக்காவிரி வடிநில வட்டம், திருச்சி அவர்கள் பெற்றுக்கொண்டார். மேலும், 2018ஆம் ஆண்டிற்கான நாட்காட்டியை பொறி.J.ரபீந்தர், தலைவர், பொறியாளர் சங்கம் திருச்சி கிளை அவர்கள் வெளியிட பொறி.S.முத்துவேல், இணை இயக்குநர் (பொது) பாசன மேலாண்மை பயிற்சி மையம், திருச்சி அவர்கள் பெற்றுக்கொண்டார்.







கீழ்க்காணும் பொறியாளர்கள் தங்களின் ஆக்கப்பூர்வமான கருத்துக்களை தெரிவித்தார்கள்.

1. பொறி.K.S.அப்துல் ரஷீத், புரவலர், திருச்சி கிளை
2. பொறி.K.பிரபாகர், புரவலர், திருச்சி கிளை
3. பொறி.J.ரபீந்தர், தலைவர், பொறியாளர் சங்கம் திருச்சி கிளை
4. பொறி.S.முத்துவேல் இணை இயக்குநர் (பொது), IMTI திருச்சி
5. பொறி.R.ராமச்சந்திரன், பேராசிரியர் IMTI திருச்சி
6. பொறி.R.குணசேகரன், கண்காணிப்பு பொறியாளர்
7. பொறி.R.ராதாகிருஷ்ணன், செயற்பொறியாளர்
8. பொறி.M.சலீம் பாபு, செயற்பொறியாளர்
9. பொறி.S.திலகவதி, துணை கண்காணிப்பு பொறியாளர்
10. பொறி.S.செந்தில்ராஜ், தலைவர், உதவி பொறியாளர் சங்கம் திருச்சி கிளை

பொறி.S.சிவக்குமார், செயலாளர், பொறியாளர் சங்கம், மையச் சங்க நடவடிக்கைகள் மற்றும் கிளைச்சங்க நடவடிக்கைகள் குறித்து விளக்கினார். பொறி.R.வரதராஜன், செயலாளர், உதவிப் பொறியாளர் சங்கம் நீதிமன்றத்திலுள்ள வழக்குகளின் தற்போதைய நிலையை விரிவாக எடுத்துரைத்தார். பொறி.R.அன்பழகன், பொருளாளர் அவர்கள் 2017ம் ஆண்டிற்கான சங்க வரவு செலவு கணக்குகளை சமர்ப்பித்தார், மேலும் திருச்சி கிளைச் சங்கத்திற்கான வங்கி சேமிப்பு கணக்கினை தற்போது புதுப்பித்து உபயோகத்திற்கு கொண்டு வந்துள்ளதாக தெரிவித்தார். பொறி.N.கார்த்திகேயன் முன்னாள் இல்லப் பொறியாளர் அவர்கள் 2017ம் ஆண்டிற்கான பொறியாளர் நாச்சிமுத்து இல்லத்தின் வரவு செலவு கணக்கினை சமர்ப்பித்தார்.

பொறி.S.ரேவதி தணிக்கையாளர், உதவிப் பொறியாளர் சங்கம் அவர்கள் வரவேற்றார். பொறி.S.திருமாறன், செயற்குழு உறுப்பினர், உதவிப் பொறியாளர் சங்கம் அவர்கள் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். பொறி.M.பத்மாதேவி இணைச் செயலாளர், உதவிப் பொறியாளர் சங்கம் அவர்கள் நன்றி நவில இரவு உணவு உபசரிப்புடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

**தீர்மானங்கள்:**

1. நமது பொறியாளர்கள் ஒரு நபர் ஊதியக்குழுவின் மூலம் பெற்று வருகிற ஊதியத்திற்கு நிகரான ஊதியத்தினை, 7வது ஊதியக்குழுவில் பெற்றுத்தர மைய சங்கத்தினை இக்கிளைச்சங்கம் வலியுறுத்துகிறது.

2. 2007ஆம் ஆண்டு உதவிப் பொறியாளர்கள் பதவி உயர்வினை விரைந்து பெற நடவடிக்கை எடுக்க மைய சங்கத்தினை இக்கிளைச் சங்கம் வலியுறுத்துகிறது.

3. நமது சங்கம் சார்பாக நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடித்திட மைய சங்கத்தினை இக்கிளைச் சங்கம் வலியுறுத்துகிறது.

4. முதுகலை பட்டம் பெற்ற பொறியாளர்களுக்குரிய ஊக்க ஊதிய உயர்வு பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க மைய சங்கத்தினை இக்கிளைச்சங்கம் வலியுறுத்துகிறது.

5. தலைமைப் பொறியாளர் பதவி உயர்வு பட்டியலில் இடம் பெற்றுள்ள பொறி.A.ரபீந்தர், தலைவர், பொறியாளர் சங்கம், திருச்சி கிளை அவர்களுக்கும் பொறி.B.கனகராஜ், சிறப்புத் தலைமைப் பொறியாளர், சுற்றுச்சூழல் குழும வட்டம், திருச்சி அவர்களுக்கும்.

   கண்காணிப்பு பொறியாளர் பதவி உயர்வு பட்டியலில் இடம் பெற்றுள்ள பொறி.A.கலைமாறன், செயற்குழு உறுப்பினர் பொறியாளர் சங்கம், திருச்சி கிளை அவர்களுக்கும் பொறி.S.முத்துவேல், இணை இயக்குநர் (பொது) மற்றும் பொறி.R.ராமச்சந்திரன், பேராசிரியர் பாசன மேலாண்மை பயிற்சி மையம், திருச்சி ஆகியோர்களுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

6. 2017ம் ஆண்டிற்கான திருச்சி கிளைச் சங்கத்தின் வரவு செலவு கணக்குகளையும் மற்றும் திருச்சி பொறியாளர் நாச்சிமுத்து இல்லத்தின் வரவு செலவு கணக்குகளையும் ஒருமனதாக ஏற்றுக்கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

7. 2013-14, 2014-15, 2015-16 மற்றும் 2016-17 ஆகிய ஆண்டுகளில் உதவிப் பொறியாளர் காலியிடங்கள் மதிப்பிடப்பட்டு விரைவில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் உதவிப் பொறியாளர்களை தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்க மைய சங்கத்தினை இக்கிளைச்சங்கம் வலியுறுத்துகிறது.

8. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் புதிதாக தேர்வு செய்யப்படும் உதவிப் பொறியாளர்களுக்கு 6 முதல் 9 மாதங்களுக்கு முழுமையான முறையில் அறிமுக பயிற்சி வழங்குவதற்குரிய நடவடிக்கை எடுக்க மைய சங்கத்தினை இக்கிளைச்சங்கம் வலியுறுத்துகிறது.

**பொறி.R.வரதராஜன்**
செயலாளர்
உதவிப் பொறியாளர் வங்கம்

**பொறி.S.சிவக்குமார்**
செயலாளர்
பொறியாளர் சங்கம்

**Proceedings of the 3rd PEC meeting of Association of Engineers and Assistant Engineers Association, TNPWD held on 08.02.2018 at 6.00 p.m in Association office at Chennai.**

The 3rd PEC Meeting of AOE & AEA, TNPWD was held on 08.02.2018 at 6.00 P.M in Association office at PWD Campus, Chepauk, Chennai – 600 005. The meeting was presided by Er.P.Krishnamoorthy, President, AOE.

The President AOE welcomed the gathering and requested Er.K.Anbu, General Secretary, AOE to brief about the subjects in the agenda.

1) Promotion in respect of 2007 batch Assistant Engineers.
2) Discussion on TNEF Chennai & Vellore Regional General Meeting to be held on 11.02.2018.
3) Discussion about the proposed Demonstration to be held on 15.02.2018 at 10.00 A.M by Tamil Nadu Engineers' Federation at Chennai.

Er.K.Anbu, General Secretary, AOE briefed the members about the subjects.

**1. Promotion in respect of 2007 batch Assistant Engineers.**

It is told that the promotion panel of 2007 batch Assistant Engineers is under preparation by the Engineer in Chief (Buildings), Chief Engineer (Buildings) and Chief Engineer (General), PWD. We have requested Engineer in Chief (Buildings), Chief Engineer (Buildings) and Chief Engineer (General), PWD to expedite the process, and send the name panel to Government early. During discussion with Engineer-in-Chief and Chief Engineer (General), it is suggested to proceed further considering the Supreme Court order excluding the by transfer Assistant Engineers

**2. Discussion on TNEF Chennai & Vellore Region meeting to be held on 11.02.2018.**

General meeting of TNEF Chennai Region proposed to be held on 11.02.2018 at Institution of Engineers, Chennai-5. The meeting is a preparatory meeting for the proposed "Demonstration" to be held on 15.02.2018 regarding the implementation of 7th Pay Commission pay scales to our Engineers with a pay matrix on par with one man Commission pay scale granted in sixth pay Commission to us. Our member engineers in Chennai & Vellore region are requested to attend the meeting on 11.02.2018 in large numbers for the success of the above meeting.

**3. Discussion about proposed "Demonstration" to be held on 15.02.2018 at 10.00 A.M. by Tamil Nadu Engineers' Federation at Chennai.**

The General Secretary, AOE explained in detail about the proposed "Demonstration" to be held on 15.02.2018 @ 10.00 A.M. by TNEF near Chepauk, Government Guest House. He explained about the various region level meeting held at Trichy, Villupuram, Tirunelveli, Madurai, and Coimbatore. He had informed that more than 5000 Engineers of all the Government Departments, Boards and Corporations are expected to participate in the above "Demonstration". He also requested our member Engineers to participate in large numbers in the above "Demonstration"

The General Secretary, AOE also informed about the present stage of the promotion panels / postings of Executive Engineers, Superintending Engineers & Chief Engineers.

All the PEC member present in the meeting participated in the discussion on the subject agenda and the following **RESOLUTIONS** are passed.

1. Resolved to request the Engineer in Chief (Buildings), Chief Engineer (Buildings) and Chief Engineer (General) to take immediate steps to send the promotion panel of Assistant Engineer to Assistant Executive Engineer (civil) based on existing service rule and court orders.
2. Resolved to participate in large numbers in the TNEF Chennai & Vellore Region meeting which is to be held on 11.02.2018 at Chennai.
3. Resolved to thank all participants for successful conduct of Region level meeting of TNEF held at Trichy, Villupuram, Madurai, Tirunelveli and Coimbatore.
4. Resolved to contribute an amount of Rs.1,50,000/- to TNEF, or any reasonable amount required proportionately as our share for the activities regarding the proposed "Demonstration" which is going to be held on 15.02.2018 in addition to our contribution Rs.50,000/- in September 2017.
5. Resolved to mobilize and participate in large numbers in the "Demonstration" by TNEF to be held on 15.02.2018 at Chennai.

The meeting came to an end with vote of Thanks by Er.R.Jeyakumar President, Assistant Engineers Association.

**Er.M.Dhanasekaran**
General Secretary, AEA

**Er.K.Anbu,**
General Secretary, AOE

**இரங்கல் :**

திருமதி.V.முத்துலெட்சுமி (வயது 81) (பொறி.V.P.சத்தியவாகீஸ்வரன், உதவிச்செயற் பொறியாளர், பொ.ப.து. அவர்களின் அன்பு தாயார்) அவர்கள் 29.12.2017 அன்று நாங்குநேரியில் காலமானார் என்பதை மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். தமது தாயாரை இழந்து வருந்தும் பொறி.V.P.சத்தியவாகீஸ்வரன் அவர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் நமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறோம்.

திரு.L.மாணிக்கவேல் பாண்டியன் (வயது 66), செயற் பொறியாளர் (ஓய்வு) பொ.ப.து. (பொறி.M.ராஜ ராஜேஸ்வரி, உதவிப் பொறியாளர், பொ.ப.து அவர்களின் அன்பு தந்தையார்) அவர்கள் 15.01.2018 அன்று எட்டையாபுரத்தில் காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். தமது தந்தையாரை இழந்து வருந்தும் பொறி.M.ராஜ ராஜேஸ்வரி அவர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் நமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறோம்.

திரு.ஆ.தர்மராஜ் அவர்கள் (வயது 90), (பொறி.D.சங்கர், உதவிசெயற்பொறியாளர், கோரம்பள்ளம் ஆறு வடிநில உபகோட்டம், தூத்துக்குடி அவர்களின் அன்பு தந்தை) 06.02.2018 அன்று திருநெல்வேலியில் காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். தமது தந்தையாரை இழந்து வருந்தும் பொறி.D.சங்கர் அவர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் நமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறோம்.

திரு.A.G..சந்திரசேகரன் (வயது 81) அவர்கள், (பொறி.C.கீதாலதா, உதவிசெயற்பொறியாளர், தலைமை பொறியாளர் அலுவலகம், நீ.ஆ.து, திருச்சி மண்டலம் அவர்களின் அன்பு தந்தை) 29.01.2018 அன்று காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். தமது தந்தையாரை இழந்து வருந்தும் பொறி.C.கீதாலதா அவர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் நமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறோம்.

- ஆசிரியர்

**The Engineer-in-Chief (Buildings), Chief Engineer (Buildings) Chennai Region and Chief Engineer (General),** PWD on the Redeployment and re-organization of Two Public Works Department Divisions for Krishnagiri District following the announcement made by the **Hon'ble Chief Minister of Tamil Nadu during the birth Centenary celebration of Dr.M.G.R.** vide Letter No.001/GS-AOE/040-2018 Dated : 24.01.2018

Sir,

We bring to your kind notice that the **Hon'ble Chief Minister** during the birth Centenary celebration of **Dr.M.G.R.** former Chief Minister of Tamil Nadu, has announced that two Public Works Department Divisions would be headquartered in the Krishnagiri District with one for **Buildings** and another for **Water Resource Organisation**.

We, therefore request **the Engineer-in-Chief (Buildings), Chief Engineer (Buildings) Chennai Region and Chief Engineer (General),** PWD to send necessary proposals to Government for re-deploying one division for **Buildings** and another for **Water Resources Organization** to Krishnagiri District in accordance with the announcement made by the **Hon'ble Chief Minister**.

With kind Regards,

Yours faithfully,

**Er.K.Anbu,**
General Secretary, AOE

---

**The Engineer-in-Chief (Buildings), Chief Engineer (Buildings) Chennai Region and Chief Engineer (General),** PWD on Establishment – Public Works Department – Tamil Nadu Engineering Service – Electrical (Branch –IV) – Panel of names of Assistant Executive Engineer (Electrical) fit for promotion as Electrical Engineer for the year 2017-18 – Proposals submitted – One candidate since retired - request to include one more candidate for approval of the panel in place of the retired Engineer vide Letter No.001/GS-AOE/039-2018 Dated : 24.01.2018

Sir,

At the outset, the Association would like to thank **the Engineer-in-Chief (Buildings), Chief Engineer (Buildings) Chennai Region, and Chief Engineer (General),** PWD for having sent panel proposal to the Government for enabling the Assistant Executive Engineer (Electrical) to get promoted as Electrical Engineer. It is learnt that out of 6 candidates proposed for inclusion in the panel, one candidate viz. Thiru.N.Palaniappan, Assistant Executive Engineer (Electrical), since retired on attaining the age of superannuation on 30.11.2017. Therefore, one more candidate has to be included in the panel against estimated vacancies of 6.

We, therefore request **the Engineer-in-Chief (Buildings), Chief Engineer (Buildings) Chennai Region, and Chief Engineer (General),** PWD to send details of additional candidates to Government so as to get the names of six Assistant Executive Engineer (Electrical) included in the approved panel for promotion as Electrical Engineer without any shortfall.

With kind Regards,

Yours faithfully,

**Er.K.Anbu,**
General Secretary, AOE

## Know our Chief Engineer / Special Secretary to Government, PWD



**Name** : Er.K. PADMANABHAN

**Qualification** : B.E. (Civil), M.E. ( Hydrology & Water Resources Engineering)

**Date of Birth** : 08.05.1961

**Native District** : Pudukkottai

| Designation | From | To | Name of Office |
|---|---|---|---|
| **Assistant Engineer** | 02.02.1985 | 31.05.1988 | O/o of the Chief Engineer (General &Buildings), PWD, Chepauk, Chennai-5. |
| | 01.06.1988 | 30.09.1995 | O/o of the Chief Engineer (Irrigation), Investigation Wing, PWD, Chepauk, Chennai-5. |
| | 01.10.1995 | 19.08.1997 | O/o of the Chief Engineer (Plan Formulation), PWD, WRO, Chepauk, Chennai-5. |
| | 20.08.1997 | 28.02.1999 | On deputation to Anna University Chennai 25 for Post Graduate Studies |
| | 01.03.1999 | 28.08.2001 | Tank Modernisation Section Walajabad and on diversion duty as Counterpart Personnel with M/s TAHAL Consulting Engineers Ltd. for WRCP works. |
| **Assistant Executive Engineer** | 29.08.2001 | 22.09.2010 | O/o of the Chief Engineer (Operation & Maintenance), PWD, WRO, Chepauk, Chennai-5. |
| **Executive Engineer** | 23.09.2010 | 06.05.2016 | Designs Division, PWD, WRO, Chepauk, Chennai-5. |
| **Joint Chief Engineer** | 07.05.2016 | 31.01.2018 | O/o the Engineer In Chief, WRD, Chepauk Chennai-5 |
| **Chief Engineer** | 01.02.2018 | Onwards | Special Secretary to Government, PWD, Fort St George, Chennai-9 |

**Our Hearty Congratulations to him** **- Editor**

**Promotion and Postings of Superintending Engineer as Chief Engineer**
**G.O. (D) No.34 Public Works (A2) Dept dated : 30.01.2018**

| | | |
|---|---|---|
| 1 | **Er.S.Manohar**<br>Superintending Engineer, Buildings (Construction and Maintenance Circle) Chennai | Chief Engineer (Buildings), Madurai Region, Madurai |
| 2 | **Er.K.Padmanabhan,**<br>Superintending Engineer / Joint Chief Enginner (Irrigation), O/o Engineer in Chief, Water Resource Department, Chennai | Chief Engineer, Public Works Department and Posted as Special Secretary to Government, Public Works Department, Secretariat, Chennai - 9 |

**Our Hearty Congratulations to the above Engineer's - Editor**

**Transfer and Postings of Chief Engineer**
**G.O. (D) No.29 Public Works (A1) Dept dated : 23.01.2018**

| S.No | Name of Engineer | Posted as |
|---|---|---|
| 1 | **Er.K.Nehru**<br>Special Secretary to Government PWD, Secretariat, Chennai - 9 | Chief Engineer, Fishing Harbour Project Circle, Fisheries Department, Chennai. |

**Promotion and Postings of Joint Chief Engineer**
**G.O. (Rt.) No.60 Public Works (A2) Dept dated : 05.02.2018**

| | | |
|---|---|---|
| 1 | **Er.C.Jayamani Mouli,**<br>Electrical Engineer, PWD, Electrical Division-2, Chennai | Joint Chief Engineer (Electrical), PWD, O/o Engineer-in-Chief (Buildings), Chief Engineer (Buildings), Chennai Region and Chief Engineer (General), PWD, Chennai. |

**Our Hearty Congratulations to the above Engineer - Editor**

## Chief Engineer's Circular

From

**Er.R.Jayasingh, B.E., M.B.A,**
Engineer-in-Chief (Buildings),
Chief Engineer (Buildings), Chennai Region &
Chief Engineer (General), PWD, Chennai – 5.

To

1. The Chief Engineer (Buildings),
   Public Works Department,
   Trichy Region, Trichy
2. The Chief Engineer (Buildings),
   Public Works Department,
   Madurai Region, Madurai
3. All Superintending Engineers of PWD including electrical of Building Organization
4. All Executive Engineers of PWD including Electrical of Building Organization

**Letter No.AEE/T10/28741/2017, dated 24.01.2018**

**Sir,**

**Sub:** Public Works Department – Buildings Organization – Re-designation of the Three sanctioned posts of Superintending Engineers (Electrical) at Chennai, Trichy and Madurai as Joint Chief Engineer (Electrical) and redeployment of the re-designated Joint Chief Engineers (Electrical) along with sanctioned posts in the Offices of the Regional Chief Engineers at Chennai, Trichy and Madurai – Electrical Engineers hitherto functioning under the control of Superintending Engineer (Electrical) to function under the control of Superintending Engineer (Civil) and issue of guidelines and delegation of powers consequent to the above said re-designation and redeployments – Orders – Issued – Regarding.

**Ref:** G.O.(Ms).No.28, Public Works (G1) Department, dated 24.01.2018

A copy of Government Order cited is herewith communicated for necessary action and may be effected from date of issue of Government Order.

Encl.: Copy of Government Order cited.

**R.Jayasingh**
Engineer-in-Chief (Buildings),
Chief Engineer (Buildings), Chennai Region &
Chief Engineer (General), PWD, Chennai – 5

## Federation News

பணியமைப்பு - ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத் ராஜ் துறை - பொறியியல் பணியமைப்பை அனைத்து நிலைகளிலும் சீரமைத்து பலப்படுத்துவதற்கான கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது - தீர்வு தாமதிப்பதால் பொறியாளர்களது உடல்நிலை பாதிக்கப்பட்டு மரணம் ஏற்பட்டுள்ளது. இது சம்மந்தமாக **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு கடித எண்.001/பொ.செ-த.ந.பொ.கூ/038-2018 நாள் 24.01.2018 மூலம் உரிய நடவடிக்கை கோரப்பட்டுள்ளது.**

ஐயா

**பார்வை:**

1. அரசு முதன்மை செயலாளர், ஊ.வ.(ம)ப.ரா.துறை சென்னை - 9. நே.மு.க.என.5416/E-5/2013-2 நாள்:28.03.2013, ஆணையர் ஊ.வ.(ம) ப.ரா.துறை, செ-15 அவர்களுக்கு அனுப்பப்பட்டது.
2. RUDAEW சங்கம் க.எண்.10/RUDAEWA/2016 நாள் 20.06.2016
3. த.நா.பொ.கூட்டமைப்பு க.எண்.100/RDPRD/2016-1 நாள:15.08.2016
4. செயலாளர், இந்திய அரசு, ஊரக வளர்ச்சி அமைச்சகம், புதுடில்லி அவர்களது நே.மு.க.எண்.P17024/24/2017-RC நாள் 16.06.2017 தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளருக்கு அனுப்பப்பட்டது.
5. கூடுதல் தலைமைச் செயலாளர், ஊ.வ.(ம)ப.ரா.துறை க.எண்.14862/E3/2017-3 நாள் 07.08.2017, இயக்குநர் ஊ.வ.(ம)ப.ராஜ் துறை, அவர்களுக்கு அனுப்பப்பட்டது.
6. RUDAEW சங்கம் க.எண்.01/RUDAEWA/2018 நாள் 08.01.2018

பார்வையில் கண்டுள்ள கடிதங்களைக் காணுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையிலுள்ள பொறியியல் பிரிவை பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலை துறை, விவசாய பொறியியல் போன்ற துறைகளில் இயங்கும் பொறியியல் பிரிவைப் போன்று மாற்றியமைத்து பலப்படுத்துவது சம்பந்தமாக பல கடித பரிமாற்றங்கள் உயர்நிலையில் நடைபெற்றபோதிலும், செயல்வடிவம் பெறாமல் கருத்துரு நிலையிலேயே இருந்து வருகிறது. இது சம்மந்தமான கருத்துருவை 2013ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டாலும், இன்றுவரை இதன் மீது எந்த முடிவும் எடுக்கப்படாத நிலையில் பொறியாளர்களது பணிநிலைமை மிகவும் கவலைதரக்கூடியதாக உள்ளது. இதன்காரணமாக அனுபவமிக்க பொறியாளர்கள் குறிப்பாக உதவிப் பொறியாளர் பதவியில் உள்ளவர்கள் பணிச்சுமையின் காரணமாக மன அழுத்தத்திற்கு உள்ளாகி இளைய வயதிலேயே இதயநோய் பாதிப்பால் மரணமடைந்து வருவது துறைக்குப் பேரிழப்பாகும். பொறியியல் பிரிவை சீரமைக்கும் பணி உரிய காலத்தில் நடைமுறைப்படுத்தியிருந்தால், இந்த உயிர் இழப்பை தவிர்த்திருக்க முடியும் என்று உறுதியாக நம்பப்படுகிறது.

2. ஊரக வளர்ச்சித்துறை உதவிப் பொறியாளர் நல சங்கத்தினர் இது சம்பந்தமாக கோரிக்கைகளை அரசுக்கு பலமுறை முன்வைத்து, இதர பொறியியல் துறைகளில் உள்ளது போல தலைமைப் பொறியாளர்களது தலைமையில் பொறியியல் பிரிவை உருவாக்க அரசின் வழிகாட்டுதல் நெறிகளுக்குட்பட்டு போதிய விளக்கங்களுடன் விவரமாக சமர்பித்துள்ளனர். இந்த

துறையின் பொறியாளர்கள் ஒவ்வொரு நிலையிலும் அளவிற்கதிகமான வேலைச் சுமைகளை சந்தித்து வருவதை எடுத்துக்கூறி, குறிப்பாக உதவிப் பொறியாளர்கள் நிலையில் துறையின் இதர பல அலுவலர்களது தலையீடு காரணமாக அனுபவித்துவரும் மன உளைச்சல் காரணமாக அவர்களது உடல் நிலை மிகவும் பாதிக்கப்படுவதையும் விளக்கியுள்ளனர். இந்த மோசமான நிலைக்கு உடனடி தீர்வு அவசியமாகிறது தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு பார்வை மூன்றில் கண்டுள்ள கடிதத்தில் உதவிப் பொறியாளர் சங்கத்தினரது நியாயமான கோரிக்கையை ஏற்று பொறியியல் பிரிவை பலப்படுத்துவது அவசியம் என்பதை வலியுறுத்தி கோரிக்கையிடப்பட்டது.

3. பார்வை நான்கில் கண்டுள்ள நேர்முகக் கடிதத்தில் மைய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சக செயலாளர் அவர்கள் பிரதம மந்திரியின் கிராம வளர்ச்சித் திட்டப்பணிகள் (PMGSY I & II) சிறப்பாக நிறைவேற, தலைமைப் பொறியாளர் மற்றும் மாநில தரக்கட்டுப்பாட்டு ஒருங்கிணைப்பாளர் பணியிடங்களை உடனடியாக நிரப்பப்படவேண்டுமென்பதை வலியுறுத்தியுள்ளார். மேலும், பார்வை 5ல் உள்ள கடிதத்தில் இப்பொருள் சம்பந்தமாக விரிவான அறிக்கையை தமிழக அரசின் கூடுதல் செயலாளர் கோரியுள்ளார். ஆனால், இதன் நிமித்தம் எடுக்கப்பட்டுவரும் முயற்சிகள் பாதிக்கப்பட்டுவரும் துறை பொறியாளர்களுக்கு எந்த தீர்வையும் தராத நிலையில்தான் உள்ளன.

4. மேலே குறிப்பிட்டுள்ள சூழ்நிலைகள் பணிபுரிவதற்கான உகந்த நிலை இல்லாமை மற்றும் பதவி உயர்வு வாய்ப்பும் குறைவாக இருக்கும் நிலையில் புதிதாக தேர்ந்தெடுக்கப்படும் உதவிப் பொறியாளர்கள் இந்தத் துறையை விரும்புவதில்லை அல்லது துறையில் சேர்ந்தபிறகு பணியை துறக்கின்றனர். இந்த நிலை மேலும் நீடித்தால் பல பொறியாளர்களை இந்த துறை இழக்க நேரிடும் என்ற அச்சம் உருவாகியுள்ளது. இதன் காரணமாக அரசு மேற்கொண்டு வரும் மைய அரசு மற்றும் மாநில அரசின் நிதி உதவிகளுடன் செயல்படுத்தப்பட்டு வரும் மக்கள் நலப் பணிகள் பெரிதும் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

5. துறையில் உள்ள சக பொறியாளர்களது இந்த பரிதாபமான சூழ்நிலையில் பொறியாளர்கள் கூட்டமைப்பு தங்களது பேராதரவை தெரிவித்துக்கொள்வதோடு இவர்களது தொடர் முயற்சி பலனளிக்கும்விதமாக துறை இயக்குநரும், அரசும் இவர்களது கோரிக்கையை பரிவுடன் பரிசீலித்து இதர பொறியியல் துறைகளில் செயல்பட்டுவரும், பொறியியல் அமைப்பைப்போன்று ஊரக வளர்ச்சித் துறையிலும் செயல்படுத்த உரிய நடவடிக்கை எடுத்து ஆணையிடும்படி இந்த கூட்டமைப்புப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறது. மைய அரசின் நிதி பங்களிப்பு திட்டங்கள் உள்பட அனைத்துத் திட்டங்களும் சிறப்பாக உரிய காலத்தில் செயல்பட இந்த மாற்றம் அவசியம் என்றும், எனவே அதற்கான உரிய ஆணையை விரைவில் வெளியிடும்படியும் கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு,

**பொறி.க.அன்பு,**
பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு

தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு - கோரிக்கைகள் மீது தமிழக அரசின் கவனத்தினை ஈர்க்கும் பொருட்டு சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்துதல் தெரிவித்து. இது சம்மந்தமாக **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு கடித எண்.001/பொ.செ-த.ந.பொ.கூ/039-2018 நாள் 01.02.2018 மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.**

மதிப்பிற்குரிய ஐயா,

**பார்வை :** 1. எங்கள் கூட்டமைப்பின் 27.10.2017 நாளிட்ட கோரிக்கை மனு (மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நேரில் வழங்கப்பட்டது).
2. தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு நிர்வாகிகள் செயற்குழு கூட்டம் 27.01.2018.

**தமிழக முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு வணக்கம்.**

தமிழகத்தின் முன்னேற்றத்திற்கு முதுகெலும்பாக இருந்து வளர்ச்சிப் பணிகளான கட்டடம் கட்டி பராமரித்தல், குடிநீர் வழங்குதல், நீர்த்தேக்கங்கள் அமைத்துப் பாசன வசதியினைப் பெருக்குதல், சாலைகள் மற்றும் பாலங்கள் அமைத்தல், மின்சார உற்பத்தியைப் பெருக்கி ஒளியேற்றுதல், தொலைத் தொடர்பு சாதனங்களை அமைத்துத் தொழில்துறையினை மேம்படுத்துதல், சுற்றுப் புறச் சுகாதாரம் பேணுதல், வீட்டு வசதி அமைத்தல் மற்றும் வேளாண் பொறியியல் பணிகளைக் கவனித்தல் போன்ற எண்ணற்ற பணிகளில் ஈடுபட்டு செயல்பட்டு வரும் பொறியாளர்களின் முக்கியத்துவத்தினை தமிழ்நாடு **பொதுப்பணித்துறை** மற்றும் **நெடுஞ்சாலைத்துறை**களுக்கு பொறுப்பேற்று தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் முன்னிறுத்தி ஆட்சி செய்யும் **தமிழக முதல்வராகிய** தங்களுக்கு நன்கு தெரியும். தமிழக அரசின் கீழ் உள்ள அனைத்துத் **துறைகள், வாரியங்கள்** மற்றும் **போக்குவரத்து கழகங்களில்** பணியாற்றும் அனைத்து **பட்டதாரிப் பொறியாளர்களின்** கீழ்க்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்றித் தரப் பணிவுடன் வேண்டிக் கொள்கிறோம்.

1. ஆறாவது ஊதியக்குழு அமலாக்கத்தின் தொடர்ச்சியாக அமைக்கப்பட்ட **ஒருநபர் குழுவால்** பரிந்துரைக்கப்பட்டு இன்றளவும் பெற்று வருகின்ற ஊதிய விகிதங்களின் அடிப்படையில் **ஏழாவது ஊதியக் குழுவில்** ஊதியம் மாற்றம் செய்து ஆணை வழங்கிடக் கேட்டுக் கொள்கிறோம். பரிந்துரைகளை கீழ்க்கண்ட ஊதியங்களின் அடிப்படையில் அமுல்படுத்திடவும் கேட்டுக் கொள்கிறோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | **உதவிப்பொறியாளர்** | ரூ.15600 - ரூ.39100 | + | தர ஊதியம் ரூ.5400 |
| 2. | **உதவி செயற் பொறியாளர்** | ரூ.15600 - ரூ.39100 | + | தர ஊதியம் ரூ.6600 |
| 3. | **செயற் பொறியாளர்** | ரூ.15600 - ரூ.39100 | + | தர ஊதியம் ரூ.7600 |

2. வாரியங்களில் பணியாற்றும் பொறியாளர்களுக்கு அரசுத்துறை பொறியாளர்களுக்கு வழங்கப்படுவது போல் 7வது ஊதியக்குழு பரிந்துரைகளை நிபந்தனையின்றி அமுல்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.
3. அரசு மருத்துவர்களுக்கும் கால்நடை மருத்துவர்களுக்கும் வழங்கப்பட்டது போல் **பட்டதாரிப் பொறியாளர்களுக்கும்** காலமுறை பதவி உயர்வு வழங்கிடக் கேட்டுக் கொள்கிறோம்.
4. பொறியியல் துறைகளின் திறனை மேம்படுத்திட **பொறியியல் சீராய்வுக் குழு** அமைத்திடக் கேட்டுக் கொள்கிறோம். **(Engineering Reforms Commission)**
5. ஊரக வளர்ச்சித்துறையில் நிலவும் அசாதாரண சூழ்நிலைகளைக் களைந்திடவும் பொறியாளர்களுக்கு வரையறை செய்யப்பட்ட பணிகள் வழங்கிடவும், உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளக் கேட்டுக் கொள்கிறோம்.

மேலும், பணிச் சுமையினால் மன அழுத்தத்திற்குள்ளாகிப் பொறியாளர்கள் ஐந்து பேர் அண்மையில் மரணமடைந்தது தவிர்க்கப்பட வேண்டுவது போன்ற கோரிக்கைகள் குறித்து, துறைகள், வாரியங்கள், போக்குவரத்துக் கழகங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் பட்டதாரிப் பொறியாளர் சங்கங்கள் தமிழக அரசுக்கு மனுக்களை அனுப்பியுள்ளன என்பதையும், 08.11.2017 அன்று **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்களை நேரில் சந்தித்து எங்கள் ஊதியம் தொடர்பாக, முறையிட்டுள்ளோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்களின் கவனத்தை கோரிக்கைகள்பால் ஈர்க்கும் பொருட்டு 15.02.2018 அன்று சென்னையில் துறைகள், வாரியங்கள், போக்குவரத்துக் கழகங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் பட்டதாரிப் பொறியாளர்கள் கலந்துகொள்ளும் **ஆர்ப்பாட்டம்** ஒன்றை நடத்த உள்ளோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள,

**பொறி.K.அன்பு**
பொதுச்செயலாளர்,
தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு

## 21.01.2018 அன்று தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு - கோயம்புத்தூரில் நடைபெற்ற மண்டல அளவிலான கூட்டத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பின் மண்டல அளவிலான ஒருங்கிணைப்புக் கூட்டம் 21.01.2018 அரசு தொழில் நுட்பக்கல்லூரி அலுமினி அரங்கம் கோயம்புத்தூரில் காலை 10.30 மணி முதல் 2.30 மணி பிற்பகல் வரை நடைபெற்றது. கூட்டத்தில் கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்டத்திலிருந்து தமிழ்நாடு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, தொழிலகப் பாதுகாப்புத்துறை, வேளாண் பொறியியல்துறை, மின் ஆய்வுத்துறை போன்ற அரசுத் துறைகளிலும் மின் வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், குடிசை மாற்று வாரியம், வீட்டுவசதி வாரியம், கோவை மாநாகராட்சி மற்றும் போக்குவரத்து துறையில் பணிபுரியும் பட்டதாரிப் பொறியாளர்கள் சுமார் 350 பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்திற்கு தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு மாநில துணைத்தலைவர் பொறி.எஸ்.மதிமாறன், தலைமை வகித்தார். பொறி.ஞானதேசிகன் (AED) கூட்டத்தை வரவேற்று பேசினார். தலைவர் பொறி.எஸ்.மதிமாறன் தலைமை உரையாற்றினார். அண்மையில் தமிழக அரசு ஊழியர்களுக்கு ஏழாவது மத்திய ஊதியக் குழு பரிந்துரைகளை அமலபடுத்தி வெளியிடப்பட்ட அரசாணைகள் எண்.303, 319, 328 ஆகியவை பொறியாளர்களின் ஊதியத்தில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளைக் களைந்திட நிரந்தர வழி காணாமல் ஊதியக் குறைப்புக்கு வழி செய்த அரசாணை எண்.242-ஐ அடிப்படையாகக் கொண்டு புதிய ஊதியம் நிர்ணயிக்கலாம் அல்லது ஊதிய மாற்றமே இல்லை என்று தெரிவித்திருப்பது 10000 பட்டாதரிப் பொறியாளர்களை ஏமாற்றுவதாக உள்ளது என்று எடுத்துரைத்தார்.

கூட்டமைப்பின் பொதுச் செயலாளர், பொறி.க.அன்பு அவர்களது உரையில் கீழ்க்கண்ட பொருள் குறித்து எடுத்துரைத்தார்.

1. உயர் நீதிமன்றத்தில் நமது ஊதியம் சம்பந்தமாக நாம் தொடுத்த வழக்கு வரும் 22.01.2018 அன்று வர இருப்பதாகவும் அதில் உள்ள சாதகமான அம்சங்களை எடுத்துரைத்தார்.
2. ஊரக வளர்ச்சித் துறையில் உதவிப் பொறியாளர்கள், உதவிச் செயற்பொறியாளர்கள் 40 - 48 வயதிற்குள்ளாகவே மோசமான பணி சூழ்நிலை காரணமாக இறந்துள்ளனர். இது மிகத்துயரமானதும், இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டிய சூழலில் ஊரக வளர்ச்சித்துறைக்கும் தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு மூலம் கடிதம் எழுதப்பட்டுள்ளது. மேலும், நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.
3. தமிழ்நாடு பொதுப்பணித்துறை முன்னாள் தலைமைப் பொறியாளர் பொறி.ஆர்.தங்கபிரகாசம், மீன்வளத்துறையில் மறுபணியினைப் நான்காவது முறையாக கோரப்பட்டதை நமது தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு எதிர்த்து கோரிக்கை விடுக்கப்பட்டதை தொடர்ந்து **பொறி.R.தங்கபிரகாசம்,** அவர்களின் மறுநியமனத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிராகரித்ததை முன்னிட்டு **மாண்புமிகு முதல்வர்** அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டதுடன் இது தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பின் வெற்றி என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொண்டார்.
4. பொறியாளர் கூட்டமைப்பின் மூலம் Assured Carrier Progression அமல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை தெரிவித்தார்.
5. தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பின் சென்னை மாபெரும் பேரணி 15.2.2018 அன்று வைத்துக் கொள்வதென என்று கருத்துத் தெரிவித்தார்.

பொறி.சிவலிங்கம்(PWD) பொறியாளர் கூட்டமைப்பு மூலம் நமது கோரிக்கைகள் வென்றெடுப்பது குறித்தும், பொறியாளர்கள் அனைவருடைய ஒத்துழைப்பு குறித்தும் பேசினார்.

பொறி.K.அப்பர்சாமி, முன்னாள் தலைவர், மின்வாரிய பொறியாளர் சங்கம் அவர்கள் பொறியாளர் கூட்டமைப்பு தற்சமயம் சிறப்பாக செயல்பட்டு வருவது குறித்தும், பொறியாளர் அனைவருடைய ஒற்றுமை குறித்தும் சிறப்புரையாற்றினார்.

பொறி.K.புனிதவேல், (PWD) அவர்கள் பொறியாளர் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்துத் துறைகளில் நிலவுகின்ற பணி சூழல் குறித்தும், குறிப்பாக ஊரக வளர்ச்சி துறையில் நிலவும் பணிச் சுமை குறித்தும், பொறியாளர்கள் அனைவரும் கூட்டமைப்பு நடவடிக்கைகளில் முழு பங்களிப்பை அளிக்க வேண்டிய அவசியம் குறித்தும் எடுத்துரைத்தார்.

பொறி.M.தனசேகரன்,பொதுச் செயலாளர், உதவிப் பொறியாளர் சங்கம் அவர்கள் பொறியாளர் ஒற்றுமை, தொழில்நுட்ப வளர்ச்சியில் பொறியாளர்கள் பங்கு குறித்தும், பொறியாளர்கள் தங்களது அன்றாட பணிகளில் ஏற்படும் பிரச்சனை குறித்தும் எடுத்துரைத்தார். பொறி.ம.குழந்தசாமி, ஊதியக்குழுவில் பொறியாளர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிகளை களைய பொறியாளர்கள் அனைவரும் ஒன்று திரண்டு அரசின் கவனத்தை ஈர்க்க 15.02.2018 அன்று சென்னை வந்து ஊர்வலத்தில் கலந்துகொள்ள வேண்டுகோள் விடுத்தார். கூட்டமைப்பை பதிவு செய்ய கேட்டுக்கொண்டார்.

மேலும், கீழ்க்கண்ட பொறியாளர்கள் தங்களது கருத்துக்களை எடுத்துரைத்தனர்.

| | |
|---|---|
| பொறி.அன்தோனி சேவியர் (Highways) | பொறி.சௌந்தரராஜன் (Corporation) |
| பொறி.ஜீவானந்தம் (TNSCB) | பொறி.சந்திரசேகரன் (RD) |
| பொறி.சுதாகர் (TWAD) | பொறி.இரபிக் (TNEB) |
| பொறி.வினோத்குமார் (Industries) | பொறி.ஞானமுருகன் (Agriculture Engineering) |
| பொறி.வீரமணி (Transport) | பொறி.குழந்தைசாமி (PWD) |

பொறி.அ.வெங்கடாசலம், தனது உரையில் பொறியாளர் கூட்டமைப்பு தோன்ற தமிழ்நாடு முன்னாள் பொறியாளர்கள் காரணம் எனினும், நம்முடைய அணுகுமுறைகள் ஊதிய குறைப்பில் நீதிமன்றத்தையும் தாண்டி தமிழக முதல்வரின் கனவத்திற்கு கொண்டு செல்வதில் உள்ளது எனக் குறிப்பிட்டார்.

**கூட்ட முடிவில் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர், பொறியாளர் க.அன்பு அவர்கள் முன் மொழிய கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.**

1. பட்டதாரிப் பொறியாளர்கள் ஊதிய முரண்பாடுகளை நிரந்தரமாகக் களைந்திட வழி செய்யாத அரசாணை எண்.328 பெரிதும் ஏமாற்றம் தருவதாகவுள்ளது. எனவே, அரசுத் துறைகள், வாரியங்கள், போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் பி.இ. படித்த உதவிப் பொறியாளர்களுக்குத் தொடக்க நிலை ஊதியமாக ராஜீவ் ரஞ்சன் கமிட்டி பரிந்துரைத்த ரூ.15600 - 39100 + தர ஊதியம் ரூ.5400 (ஆறாவது ஊதியக்குழு) என்பதை உறுதி செய்து, அதனடிப்படையில் அனைத்து அரசுப் பணியாளருக்கும் வழங்கியது போல் ஏழாவது ஊதியக் குழு பிற அரசுத்துறை ஊழியர்களுக்கு ஊதிய ஏற்றம் அளித்தது போல் ஊதிய மாற்றம் செய்து ஆணை வழங்கிடத் தமிழக அரசினை இக்கூட்டம் வலியுறுத்துகிறது.
2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொதுப்பணித்துதுறை, நெடுஞ்சாலைத் துறை போன்ற பொறியியல் துறைகளுக்குப் பொறுப்பேற்றுள்ள போது அவர்களிடமே நேரில் முறையிட்டும் நடவடிக்கை இல்லாததால், அரசின் கவனத்தினை ஈர்க்கும் வண்ணம் மாநிலம் தழுவிய இயக்கம் ஒன்று பிப்ரவரி மாதம் மூன்றாவது வாரத்தில் சென்னையில் நடத்துவது என்றும் கேட்டுக் கொள்கிறது.
3. புதிய பென்சன் முறையினை ரத்துச் செய்யுமாறும் பழைய பென்சன் முறையை நடைமுறைப்படுத்த வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.
4. வளர்ந்து வரும் தொழில் நுட்பங்களை உள்கட்டமைப்புகளில் நடைமுறைப்படுத்திட, பிரிவு அலுவலகங்களில் பட்டதாரிப் பொறியாளர்களை மட்டும் நியமித்திடும் வகையில் விதிகளைத் திருத்திடத் தமிழக அரசினை இக்கூட்டமைப்பு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.
5. கோயம்புத்தூர் மண்டலத்தில் கூட்டமைப்பின் பணிகளை ஒருங்கிணைக்கும் வண்ணம், கீழ்க்கண்ட பொறியாளர்களைக் கொண்ட ஒருங்கிணைப்புக் குழு நியமிக்கப்படுகிறது.

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | P. ரஃபீக் முகமது | - தமிழ்நாடு மின்சார வாரியம் |
| 2. | S. செந்தில்குமார் | - தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை |
| 3. | S. சிவலிங்கம் | - தமிழ்நாடு பொதுப்பணித்துறை |
| 4. | S. ஆனந்த பாலதண்டபாணி | - தமிழ்நாடு பொதுப்பணித்துறை |
| 5. | N. ராஜா | - தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை |
| 6. | S. கோகுல் | - தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை |
| 7. | V.K. விஸ்வநாதன் | - தமிழ்நாடு வேளாண் பொறியியல் துறை |
| 8. | S. சுதாகர் | - தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் |
| 9. | P. மோகன் | - தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் |
| 10. | கணேசன் | - கோவை மாநகராட்சி |
| 11. | வீரமணி | - தமிழ்நாடு போக்குவரத்துக் கழகம் |
| 12. | G. சரவணகுமார் | - தமிழ்நாடு பொதுப்பணித்துறை |

ஊரக வளர்ச்சித் துறையில் பொறியாளர்களுக்கு நல்ல பணிச்சூழல் உருவாக்கவும் பணி கட்டமைப்புகளை மாற்றி தமிழ்நாடு பொறியாளர்கள் பதவிகளை உருவாக்கி அவற்றின் கீழ் பொறியாளர்கள் பணிபுரியவும் அரசினை கேட்டுக்கொள்வது என்று தீர்மாணிக்கப்பட்டது.

பொறி.D.இராஜன், பொ.ப.து. அவர்கள் நன்றியுரையுடன் கூட்டம் மதியம் 2.30 முடிந்தது.

**பொறி.எஸ்.ஆனந்த்**
தலைவர்
தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு

**பொறி.க.அன்பு**
பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு

## தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பின் சென்னை - வேலூர் மண்டல ஆயத்தக்கூட்டம் மற்றும் சென்னையில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கான நடவடிக்கைகளின் சுருக்கம்

**இடம்:** தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம், எண்.35, தாலுகா ஆஃபிஸ் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.

தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு ஆய்வுக் கூட்டம் சென்னையில் 27.01.2018 அன்று காலை 11.00 மணியளவில் தொடங்கியது.

**பொறி.S.ஆனந்த்,** தலைவர் தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு அவர்கள் தலைமையேற்க, **பொறி.க.அன்பு,** பொதுச்செயலாளர் மற்றும் **பொறி.அ.வெங்கடாசலம்** ஆகியோர் அனைத்து உறுப்பினர்களுடன் கலந்துரையாடல் செய்தனர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட துறைகள் / நிறுவனங்களின் பொறுப்பாளர்கள் பங்கேற்றனர்

**தமிழ்நாடு பொதுப்பணித்துறை**
**தமிழ்நாடு மின்வாரியம்**
**தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை**
**தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம்**
**தமிழ்நாடு தொழில்பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுதுறை**
**சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம்.**
**தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை**
**தமிழ்நாடு வேளாண் பொறியியல் துறை**
**தமிழ்நாடு குழநீர் வடிகால் வாரியம்**
**சென்னை பெருநகர மாநகராட்சி (GCC)**
**தமிழ்நாடு போக்குவரத்துக்கழகம்**

கலந்துரையாடல் கூட்டத்தில் கூட்டமைப்பு சார்பாக எடுக்கப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டு பின்வருமாறு திட்டமிடப்பட்டது.

**கீழ்க்காணும் ஐந்து அம்ச கோரிக்கைகள் வைக்க ஒருமனதாக முடிவெடுக்கப்பட்டது**

1) பட்டதாரிப் பொறியாளர்களுக்கு ஆறாவது ஊதியக்குழு ஒரு நபர் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஊதியத்தின் அடிப்படையில் ஏழாவது ஊதியக் குழு பரிந்துரைகளை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை கீழ்க்கண்ட ஊதியங்களின் அடிப்படையில் அமுல்படுத்திட கேட்டுக்கொள்ளுதல்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | உதவிப்பொறியாளர் | ரூ.15600 - ரூ.39100 | + | தர ஊதியம் ரூ.5400 |
| 2. | உதவி செயற் பொறியாளர் | ரூ.15600 - ரூ.39100 | + | தர ஊதியம் ரூ.6600 |
| 3. | செயற் பொறியாளர் | ரூ.15600 - ரூ.39100 | + | தர ஊதியம் ரூ.7600 |

2) வாரியங்களில் பணியாற்றும் பொறியாளர்களுக்கு அரசுத்துறை பொறியாளர்களுக்கு வழங்கப்படுவது போல் ஒரு நபர் குழு அளித்த பரிந்துரைகளை நிபந்தனையின்றி அமுல்படுத்துமாறு கேட்டுக்கொள்ளுதல்.

3) அரசு மருத்துவர்களுக்கும், கால்நடை மருத்துவர்களுக்கும் வழங்கப்படுவது போல் பட்டதாரிப் பொறியாளர்களுக்கும் காலமுறை பதவி உயர்வு **(Assured Carrier Progress)** வழங்கிடக் கேட்டுக்கொள்ளுதல்.

4) பொறியியல் துறைகளின் திறனை மேம்படுத்திட பொறியியல் சீராய்வுக் குழு அமைத்திடக் கேட்டுக்கொள்ளுதல். (Engineering Reforms Commission)

5) ஊரக வளர்ச்சித்துறையில் நிலவும் அசாதாரன சூழ்நிலைகளைக் களைந்திடவும் பொறியாளர்களுக்கு வரையறை செய்யப்பட்ட பணிகள் வழங்கிடவும், உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளக் கேட்டுக்கொள்ளுதல்.

**பொறி.எஸ்.ஆனந்த்**
தலைவர்
தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு

**பொறி.க.அன்பு**
பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு

## 10.02.2018 அன்று தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு - சேலத்தில் நடைபெற்ற மண்டல அளவிலான கூட்டத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பின் மண்டல அளவிலான ஒருங்கிணைப்புக் கூட்டம் 10.02.2018 சோனா நுட்பக்கல்லூரி கலை அரங்கத்தில் காலை 10.30 மணி முதல் 2.30 மணி பிற்பகல் வரை நடைபெற்றது. கூட்டத்தில் சேலம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்திலிருந்து தமிழ்நாடு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, தொழிலகப் பாதுகாப்புத்துறை, வேளாண் பொறியியல்துறை, மின் ஆய்வுத்துறை போன்ற அரசுத் துறைகளிலும் மின் வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், குடிசை மாற்று வாரியம், வீட்டுவசதி வாரியம், மற்றும் போக்குவரத்து துறையில் பணிபுரியும் சுமார் 400 பட்டதாரிப் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்திற்கு தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு மாநிலத்தலைவர் பொறி.எஸ்.ஆனந்த் அவர்கள் தலைமை வகித்தார். பொறி.ஜெ.ஜெயக்குமார் (துநாமிவா) வரவேற்புரை நிகழ்த்தினார். பொறியாளர் கூட்டமைப்பு கூட்டத்தை, பொறி.G.பாலகிருஷ்ணன், முன்னாள் த.நா.பொ.கூட்டமைப்பு துவக்கி வைத்துப் பேசினார். பொறி. எஸ்.ஆனந்த் தலைமை உரையாற்றினார். அண்மையில் தமிழக அரசு ஊழியர்களுக்கு ஏழாவது மத்திய ஊதியக் குழு பரிந்துரைகளை அமல்படுத்தி வெளியிடப்பட்ட அரசாணைகள் எண்.303, 319, 328 ஆகியவை பொறியாளர்களின் ஊதியத்தில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளைக் களைந்திட நிரந்தர வழி காணாமல், ஊதியக் குறைப்புக்கு வழி செய்த அரசாணை எண்.242-ஐ அடிப்படையாகக் கொண்டு புதிய ஊதியம் நிர்ணயிக்கலாம் அல்லது ஊதிய மாற்றமே இல்லை என்று தெரிவித்திருப்பது, 10000 பட்டாதரிப் பொறியாளர்களை ஏமாற்றுவதாக உள்ளது என்று எடுத்துரைத்தார்.

கூட்டமைப்பின் பொதுச் செயலாளர், பொறி.க.அன்பு அவர்களது உரையில் கீழ்க்கண்ட பொருள் குறித்து எடுத்துரைத்தார்.

1. உயர் நீதிமன்றத்தில் நமது ஊதியம் சம்பந்தமாக நாம் தொடுத்த வழக்கின் தீர்ப்பு விரைவில் வர இருப்பதாகவும் அதில் உள்ள சாதகமான அம்சங்களை எடுத்துரைத்தார்.
2. ஊரக வளர்ச்சித் துறையில் உதவிப் பொறியாளர்கள், உதவிச் செயற்பொறியாளர்கள் 40 - 48 வயதிற்குள்ளாகவே மோசமான பணிச் சூழல் மற்றும் அழுத்தம் காரணமாக இறந்துள்ளனர். இது மிகத்துயரமானதும், இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டிய சூழலில் ஊரக வளர்ச்சித்துறைக்கும் தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு மூலம் கடிதம் எழுதப்பட்டு, தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.
3. தமிழ்நாடு பொதுப்பணித்துறை முன்னாள் தலைமைப் பொறியாளர் பொறி.ஆர்.தங்கபிரகாசம், மீன்வளத்துறையில் மறுபணியினை நான்காவது முறையாக கோரப்பட்டதை நமது தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு எதிர்த்து கோரிக்கை விடுக்கப்பட்டதை தொடர்ந்து பொறி.R.தங்கபிரகாசம், அவர்களின் மறுநியமனத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிராகரித்ததை முன்னிட்டு **மாண்புமிகு முதல்வர்** அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டதுடன் இது தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பின் வெற்றி என்பதை பெருமிதத்துடன் தெரிவித்துக் கொண்டார்.
4. பொறியாளர் கூட்டமைப்பின் மூலம் Assured Carrier Progression அமல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை தெரிவித்தார்.
5. தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பின் மாபெரும் ஆர்ப்பாட்டம் 15.2.2018 அன்று சென்னையில் வைத்துக் கொள்வதென என்று கருத்துத் தெரிவித்தார்.

தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர் பொறி.K.புனிதவேல், (PWD) அவர்கள், பொறியாளர் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்துத் துறைகளில் நிலவுகின்ற பணிச் சூழல் குறித்தும் குறிப்பாக ஊரக வளர்ச்சி துறையில் நிலவும் பணிச் சுமை குறித்தும், பொறியாளர்கள் அனைவரும் கூட்டமைப்பு நடவடிக்கைகளில் முழு பங்களிப்பை அளிக்க வேண்டிய அவசியம் குறித்தும் எடுத்துரைத்தார்.

பொறி.M.தனசேகரன், பொதுச் செயலாளர், உதவிப் பொறியாளர் சங்கம் அவர்கள் பொறியாளர் ஒற்றுமை, தொழில்நுட்ப வளர்ச்சியில் பொறியாளர்கள் பங்கு குறித்தும், பொறியாளர்கள் தங்களது அன்றாட பணிகளில் ஏற்படும் பிரச்சனை குறித்தும் எடுத்துரைத்தார். மேலும், கீழ்க்கண்ட பொறியாளர்கள் தங்களது கருத்துக்களை எடுத்துரைத்தனர்.

1. பொறி.P.முருகேசன், பொதுப்பணித்துறை
2. பொறி.செல்வகுமார், பொதுச்செயலாளர்-போக்குவரத்துக்கழகம்,
3. பொறி.N.மதிமாறன், பொதுச்செயலாளர்-தமிழ்நாடு மின்சார வாரியம்,
4. பொறி. பிரகாஷ், தலைவர், ஊரக வளர்ச்சித்துறை
5. பொறி.T.S. இளங்கோவன், நெடுஞ்சாலைத்துறை
6. பொறி.J. பிரகாஷ், ஊரக வளர்ச்சித்துறை
7. பொறி.ராஜாராம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்
8. பொறி.S.கோபாலகிருஷ்ணன், பொறுப்பாளர், பொறியாளர் சங்கம், பொபது
9. பொறி.S.ராஜேஷ்வர்பாபு, பொருளாளர், பொறியாளர் சங்கம், பொபது
10. பொறி.A.அப்துல் குத்தூஸ், பொறுப்பாளர், உதவி பொறியாளர் சங்கம், பொபது
11. பொறி.S.ரமேஷ் சந்திரன், தணிக்கையாளர், பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளர் சங்கம்
12. பொறி.பூபதிராஜா, ஊரக வளர்ச்சித்துறை
13. பொறி.வெங்கடேசன்
14. பொறி.அரசன், தமிழ்நாடு மின்சார வாரியம்

பொறி.அ.வெங்கடாசலம், தனது உரையில் பொறியாளர் கூட்டமைப்பு தோன்ற தமிழ்நாடு முன்னாள் பொறியாளர்கள் காரணம் என்றும், நம்முடைய அணுகுமுறைகள் ஊதிய குறைப்பில் நீதிமன்றத்தையும் தாண்டி தமிழக முதல்வரின் கவனத்திற்கு கொண்டு செல்வதில் உள்ளது எனக் குறிப்பிட்டார்.

**கூட்ட முடிவில் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர், பொறியாளர் க.அன்பு அவர்கள் முன் மொழிய கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.**

1. பட்டதாரிப் பொறியாளர்கள் ஊதிய முரண்பாடுகளை நிரந்தரமாகக் களைந்திட வழி செய்யாத அரசாணை எண்.328 பெரிதும் ஏமாற்றம் தருவதாகவுள்ளது. எனவே, அரசுத் துறைகள், வாரியங்கள், போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் பி.இ. படித்த உதவிப் பொறியாளர்களுக்குத் தொடக்க நிலை ஊதியமாக ராஜீவ் ரஞ்சன் கமிட்டி பரிந்துரைத்த ரூ.15600 - 39100 + தர ஊதியம் ரூ.5400 (ஆறாவது ஊதியக்குழு) என்பதை உறுதி செய்து, அதனடிப்படையில் அனைத்து அரசுப் பணியாளருக்கும் வழங்கியது போல் ஏழாவது ஊதியக் குழு பிற அரசுத்துறை ஊழியர்களுக்கு ஊதிய ஏற்றம் அளித்தது போல் ஊதிய மாற்றம் செய்து ஆணை வழங்கிடத் தமிழக அரசினை இக்கூட்டம் வலியுறுத்துகிறது.
2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொதுப்பணித்துதுறை, நெடுஞ்சாலைத் துறை போன்ற பொறியியல் துறைகளுக்குப் பொறுப்பேற்றுள்ள போது அவர்களிடமே நேரில் முறையிட்டும் நடவடிக்கை இல்லாததால், அரசின் கவனத்தினை ஈர்க்கும் வண்ணம் மாநிலம் தழுவிய இயக்கம் பிப்ரவரி மாதம் 15 ஆம் தேதி சென்னையில் நடத்துவது என்றும் கேட்டுக் கொள்கிறது.
3. ஊரக வளர்ச்சித் துறையில் பொறியாளர்களுக்கு நல்ல பணிச்சூழல் உருவாக்கவும் பணி கட்டமைப்புகளை மாற்றி தலைமை பொறியாளர்கள் பதவிகளை உருவாக்கி அவற்றின் கீழ் பொறியாளர்கள் பணிபுரியவும் அரசினை கேட்டுக்கொள்வது என்று தீர்மாணிக்கப்பட்டது.
4. காலமுறை ஊதிய உயர்வு அளிக்கவும் கேட்டுக்கொள்வது.
5. பொறியாளர் சீரமைப்புக் குழு (Engineers Reforms Commission) அமைத்திட, அரசினைக் கேட்டுக் கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

ஊரக வளர்ச்சித் துறையில் பொறியாளர்களுக்கு நல்ல பணிச்சூழல் உருவாக்கவும் பணி கட்டமைப்புகளை மாற்றி தலைமைப் பொறியாளர் பதவிகளை உருவாக்கி அவற்றின் கீழ் பொறியாளர்கள் பணிபுரியவும் அரசினை கேட்டுக்கொள்வது என்று தீர்மாணிக்கப்பட்டது.

பொறி.S.பார்த்தீபன் - AEE, PWD பொ.ப.து. அவர்கள் நன்றியுரையுடன் கூட்டம் மதியம் 2.30 முடிந்தது.

**பொறி.எஸ்.ஆனந்த்**
தலைவர்,
தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு

**பொறி.க.அன்பு**
பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு

## 11.02.2018 அன்று தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு - சென்னையில் நடைபெற்ற சென்னை மற்றும் வேலூர் மண்டல அளவிலான கூட்டத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறிப்புகள்

தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பின் மண்டல அளவிலான ஒருங்கிணைப்புக் கூட்டம் 11.02.2018 இன்ஸ்டியூஷன் ஆப் இன்ஜினியர்ஸ் இந்தியா அரங்கம், சென்னையில் காலை 10.30 மணி முதல் 2.30 மணி பிற்பகல் வரை நடைபெற்றது. கூட்டத்தில் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர் ஆகிய மாவட்டத்திலிருந்து தமிழ்நாடு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, தொழிலகப் பாதுகாப்புத்துறை, வேளாண் பொறியியல்துறை, மின் ஆய்வுத்துறை போன்ற அரசுத் துறைகளிலும் மின் வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், குடிசை மாற்று வாரியம், வீட்டுவசதி வாரியம், மற்றும் போக்குவரத்து துறையில் பணிபுரியும் பட்டதாரிப் பொறியாளர்கள் சுமார் 200 பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்திற்கு தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு மாநிலத்தலைவர் பொறி.எஸ்.ஆனந்த் அவர்கள் தலைமை வகித்தார்.

கூட்டமைப்பின் பொதுச் செயலாளர், பொறி.க.அன்பு அவர்களது உரையில் கீழ்க்கண்ட பொருள் குறித்து எடுத்துரைத்தார்.

1. உயர் நீதிமன்றத்தில் நமது ஊதியம் சம்பந்தமாக நாம் தொடுத்த வழக்கின் தீர்ப்பு விரைவில் வர இருப்பதாகவும் அதில் உள்ள சாதகமான அம்சங்களை எடுத்துரைத்தார்.
2. ஊரக வளர்ச்சித் துறையில் உதவிப் பொறியாளர்கள், உதவிச் செயற்பொறியாளர்கள் ஆகியோரின் பணிச்சுமை குறித்த மனக் குமுறல்கள் பற்றி விவாதிக்கப்பட்டது. சூழலில் ஊரக வளர்ச்சித்துறைக்கும் தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு மூலம் கடிதம் எழுதப்பட்டுள்ளது.
3. பொறியாளர் கூட்டமைப்பின் மூலம் Assured Carrier Progression அமல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை தெரிவித்தார்.
4. தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பின் மாபெரும் ஆர்ப்பாட்டம்15.2.2018 அன்று சென்னையில் நடைபெறும் என தெரிவித்தார்.

பொறி.P.கிருஷ்ணமூர்த்தி, தலைவர், பொறியாளர் சங்கம் அவர்கள் தனது உரையில் 6-வது ஊதியக்குழு பரிந்துரைகளை பொறியாளர்களுக்கு அமல்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், 15.02.2018 அன்று நடைபெற இருக்கும் ஆர்ப்பாட்டத்தில் பொறியாளர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்றும் எடுத்துரைத்தார்.

மூத்த பொறியாளர் பொறி.அப்பர்சாமி அவர்கள் பொறியாளர்கள் அத்தியாவசியம் மற்றும் அவசரப்பணிகளில் நேரம்பார்க்காது பணிபுரிவது குறித்தும் 15.02.18 அன்று நடைபெற இருக்கும் ஆர்ப்பாட்டத்தில் பொறியாளர்களின் பங்கு குறித்தும் எடுத்துரைத்தார்.

மூத்த பொறியாளர் கோவிந்தன் அவர்கள் நமது கோரிக்கைகள் குறித்து தலைமைப் பொறியாளர்கள் மாண்புமிகு அமைச்சர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் செல்வது குறித்து எடுத்துரைத்தார்.

மூத்த பொறியாளர் அ. வீரப்பன் அவர்கள் பொறியாளர்கள் தங்களது கோரிக்கைகளை வென்றெடுப்பதில் போராட்ட குணம் வளர்க்கப்பட வேண்டிய அவசியம் குறித்தும், தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் எடுத்துரைத்தார்.

பொறி.அ.வெங்கடாசலம் அவர்கள் ஏழாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகளை எத்தகைய முரண்பாடுமில்லாமல் அமுல் படுத்துவது குறித்து ஆலோசனைகளை வழங்கினார்.

மேலும் கீழ்க்கண்ட பொறியாளர்கள் தங்களது கருத்துக்களை எடுத்துரைத்தனர்.

பொறி.N.மதிமாறன், தமிழ்நாடு மின்சார வாரியம்
பொறி.K. புனிதவேல், பொதுப்பணித்துறை
பொறி. நடராசன், தமிழ்நாடு போக்குவரத்துக்கழகம்
பொறி. K. பன்னீர்செல்வம், பொதுப்பணித்துறை
பொறி. பிரேம்குமார்,
பொறி. வரதராஜன், தமிழ்நாடு பொதுப்பணித்துறை
பொறி. தீபக், நெடுஞ்சாலைத்துறை
பொறி. ஜெயந்தி, சென்னை பெருமாநகராட்சி
பொறி.K.முருகன், பொதுப்பணித்துறை
பொறி.M. தனசேகரன், சென்னை பெருமாநகராட்சி
பொறி. சசிதரன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
பொறி. குமரேசன்,
பொறி. தேன்மொழி, நெடுஞ்சாலைத்துறை,
பொறி. S. சுகந்தி, பொதுப்பணித்துறை
பொறி. சம்பத்குமார், தமிழ்நாடு மின்சார வாரியம்
பொறி.R.ஜெயக்குமார், பொதுப்பணித்துறை
பொறி. சுரேஷ்பாபு, பொதுப்பணித்துறை

**கூட்ட முடிவில் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர், பொறியாளர் க.அன்பு அவர்கள் முன் மொழிய கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.**

1. பட்டதாரிப் பொறியாளர்கள் ஊதிய முரண்பாடுகளை நிரந்தரமாகக் களைந்திட வழி செய்யாத அரசாணை எண்.328 பெரிதும் ஏமாற்றம் தருவதாகவுள்ளது. எனவே, அரசுத் துறைகள், வாரியங்கள், போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் பி.இ. படித்த உதவிப் பொறியாளர்களுக்குத் தொடக்க நிலை ஊதியமாக ராஜீவ் ரஞ்சன் கமிட்டி பரிந்துரைத்த ரூ.15600 - 39100 + தர ஊதியம் ரூ.5400 (ஆறாவது ஊதியக்குழு) என்பதை உறுதி செய்து, அதனடிப்படையில் அனைத்து அரசுப் பணியாளருக்கும் வழங்கியது போல் ஏழாவது ஊதியக் குழு பிற அரசுத்துறை ஊழியர்களுக்கு ஊதிய ஏற்றம் அளித்தது போல் ஊதிய மாற்றம் செய்து ஆணை வழங்கிடத் தமிழக அரசினை இக்கூட்டம் வலியுறுத்துகிறது.
2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொதுப்பணித்துதுறை, நெடுஞ்சாலைத் துறை போன்ற பொறியியல் துறைகளுக்குப் பொறுப்பேற்றுள்ள போது அவர்களிடமே நேரில் முறையிட்டும் நடவடிக்கை இல்லாததால், அரசின் கவனத்தினை ஈர்க்கும் வண்ணம் மாநிலம் தழுவிய இயக்கம் பிப்ரவரி மாதம் 15 ஆம் தேதி சென்னையில் நடத்துவது என்றும் கேட்டுக் கொள்கிறது.
3. ஊரக வளர்ச்சித் துறையில் பொறியாளர்களுக்கு நல்ல பணிச்சூழல் உருவாக்கவும் பணி கட்டமைப்புகளை மாற்றி தலைமை பொறியாளர்கள் பதவிகளை உருவாக்கி அவற்றின் கீழ் பொறியாளர்கள் பணிபுரியவும் அரசினை கேட்டுக்கொள்வது என்று தீர்மாணிக்கப்பட்டது.
4. காலமுறை ஊதிய உயர்வு அளிக்கவும் கேட்டுக்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது.
5. பொறியாளர் சீரமைப்புக் குழு (Engineers Reforms Commission) அமைத்திட, அரசினைக் கேட்டுக் கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

பொறி.C.பாலமுருகன், உதவி செயற்பொறியாளர், பொ.ப.து. அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் மதியம் 2.30 மணியளவில் முடிவுற்றது.

**பொறி.எஸ்.ஆனந்த்**
தலைவர்
தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு

**பொறி.க.அன்பு**
பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு

## 15.02.2018 அன்று தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு, சென்னையில் நடைபெற்ற மாபெரும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் நடவடிக்கை குறிப்புகள்

**தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு** சார்பில் அரசு துறைகள், அனைத்து வாரியங்கள், கழகங்களில் பணியாற்றும் சுமார் 5000 பட்டதாரிப் பொறியாளர்கள் பங்கேற்ற மாபெரும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் சென்னை சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளிகை அருகில் 15.02.2018 அன்று கீழ்க்கண்ட 5 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்றிட தமிழக அரசின் கவனத்தை ஈர்க்கும் பொருட்டு நடைபெற்றது.

1. அரசு துறைகளில் பணியாற்றும் பட்டதாரி பொறியாளர்களுக்கு ஆறாவது ஊதியக்குழு திரு.ராஜீவ் ரஞ்சன் ஒருநபர் கமிட்டி மூலம் அமலாக்கப்பட்ட ஊதிய விகிதங்களின் அடிப்படையில் ஏழாவது ஊதியக்குழு விகிதங்கள் அமலாக்கப்பட வேண்டும்.
2. வாரியங்கள் மற்றும் கழகங்களில் பணியாற்றும் அனைத்து பட்டதாரி பொறியாளர்களுக்கும் ஆறாவது ஊதியக்குழு ஒருநபர் குழு பரிந்துரைகளை அமலாக்க வேண்டும்.
3. பட்டதாரி பொறியாளர்களுக்கு காலமுறை பதவி உயர்வு வழங்க வேண்டும்.
4. பொறியியல் துறை, பொறியாளர்களுடைய பணிச்சூழல் போன்றவற்றை சீரமைக்க பொறியியல் மறு சீரமைப்புக் குழு அமைக்க வேண்டும்.
5. ரூ.20,000 கோடிக்கும் மேல் நிதி ஒதுக்கீடு பெற்று பணிகள் நடைபெற்று கொண்டிருக்கும் ஊரக வளர்ச்சித் துறையில் மத்திய அரசு கேட்டுக்கொண்டது போல் தலைமைப் பொறியாளர் தலைமையில் பொறியாளர் பதவியை உருவாக்கி பொறியியல் கட்டமைப்பினை முறைப்படுத்த வேண்டும்.

**மாபெரும் கவன ஈர்ப்பு** ஆர்ப்பாட்டத்திற்கு **தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பின்** தலைவர் பொறி.S.ஆனந்த் தலைமையேற்றார். தலைமை உரையில் பொறியாளர் கூட்டமைப்பு சார்பில் கடந்த இரண்டு மாதங்களாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், மண்டல அளவில் நடைபெற்ற கூட்டங்களில் பொறியாளர்கள் பெரும்திரளாக கலந்துகொண்டு சிறப்பித்தது பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார்.

பொறி.K.அன்பு, பொதுச் செயலாளர், தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு அவர்கள் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் குறித்து தனது விளக்கவுரையில் பட்டப் பொறியாளர்களின் ஊதிய விகிதங்களை பெறுவதற்கு தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு எடுத்துவரும் நடவடிக்கைகள் பற்றியும், மண்டல அளவில் நடைபெற்ற கூட்டங்களில் பொறியாளர்கள் அனைவரும் முழு அளவில் பங்கேற்றது குறித்தும், தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு எடுக்கும் அனைத்து முடிவுகளுக்கும் பொறியாளர்கள் அனைவரும் தங்களது ஒத்துழைப்பை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்தும், ஊரக வளர்ச்சித் துறையில் தற்சமயம் நிலவும் பொறியாளர்களின் பணிச்சூழல் குறித்தும் தெளிவாக எடுத்துரைத்தார்.

கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கீழ்க்காணும் துறைகள், வாரியங்கள், கழகங்களில் பணியாற்றும் பட்டதாரிப் பொறியாளர்கள் கலந்துகொண்டனர்.

| | | | |
|---|---|---|---|
| 1. | **பொதுப்பணித்துறை** | 2. | **நெடுஞ்சாலைத்துறை** |
| 3. | **ஊரக வளர்ச்சித்துறை** | 4. | **தொழிலகப் பாதுகாப்புத்துறை** |
| 5. | **வேளாண் பொறியியல்துறை** | 6. | **மின் ஆய்வுத்துறை** |
| 7. | **போக்குவரத்துத் துறை** | 8. | **மின்சார வாரியம்** |
| 9. | **குடிநீர் வடிகால் வாரியம்** | 10. | **குடிசைப்பகுதி மாற்று வாரியம்** |
| 11. | **வீட்டு வசதி வாரியம்** | 12. | **மாசு கட்டுப்பாட்டு வாரியம்** |
| 13. | **காவலர் வீட்டு வசதிக் கழகம்** | 14. | **சென்னை பெருநகர மாநகராட்சி** |
| 15. | **சென்னை குடிநீர் வாரியம்** | 16. | **தலைமை கொதிகலன் ஆய்வாளர்** |
| 17. | **அரசு மோட்டார் வாகன பராமரிப்புத் துறை** | 18. | **மாநில சுகாதார போக்குவரத்துத்துறை** |

மூத்த பொறியாளர் பொறி.அ.வீரப்பன் அவர்கள் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தைத் துவக்கி வைத்து தொடக்கவுரையாற்றினார். தனது தொடக்க உரையில் ஒவ்வொரு ஊதியக்குழு பரிந்துரைகள் அமலாக்கப்படும் போதும் பொறியாளர்களுக்கு தொடர்ந்து அநீதி வழங்கப்பட்டு வருவது குறித்தும், ஒன்றுபட்ட மற்றும் தொடர்ந்த போராட்ட நடவடிக்கைகள் மூலம் மட்டுமே நமது கோரிக்கைகளை வென்றெடுக்க முடியும் என எடுத்துரைத்தார்.

மூத்த பொறியாளர் பொறி.D.ஆறுமுகம், அவர்கள் தனது வாழ்த்துரையில் கடந்த காலங்களில் ஊதியக்குழு பரிந்துரைகளில் பட்டதாரி பொறியாளர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்தும் அவற்றை சரிசெய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் எடுத்துரைத்தார். மேலும், தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு தற்சமயம் மிகச் சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும், நமது கோரிக்கைகள் அனைத்தும் வெற்றி பெறும்வரை தொடர்ந்து போராட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய அவசியம் குறித்தும் எடுத்துரைத்தார்.

மூத்த பொறியாளர் பொறி.பி.கே.சிவதாணுப்பிள்ளை அவர்கள் தனது வாழ்த்துரையில் தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு மிகச் சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரவேண்டிய அவசியம் குறித்து எடுத்துரைத்தார்.

மூத்த பொறியாளர் பொறி.G.பாலகிருஷ்ணன் அவர்கள் தனது வாழ்த்துரையில் ஊதிய விகிதங்கள் மற்றும் இதர பணிகளில் ஏற்படும் பிரச்சனைகள் அனைத்தையும் தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு ஒன்றினால் மட்டும்தான் சரிசெய்ய இயலும் என்று எடுத்துரைத்தார்.

மூத்த பொறியாளர் பொறி.அப்பாவு அவர்கள் தனது வாழ்த்துரையில் கடந்த காலங்களில் பொறியாளர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்தும், அவற்றில் தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பின் பங்கு குறித்தும் எடுத்துரைத்தார்.

மூத்த பொறியாளர் பொறி.கே.அப்பர்சாமி அவர்கள் தனது வாழ்த்துரையில் பொறியாளர்களுடைய ஒத்துழைப்பின் அவசியம் குறித்தும் எடுத்துரைத்தார்.

பொறி.K.M.சையது, பொதுச் செயலளர், இந்திய பொறியாளர் கூட்டமைப்பு பொறி.சசானே, மராட்டிய மாநில பொறியாளர் சங்கம், பொறி.சேஞ்சுரே, மராட்டிய மாநில பொறியாளர் சங்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். அனைவரும் தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு எடுத்துவரும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் இந்திய பொறியாளர் கூட்டமைப்பு தனது முழு ஆதரவையும் நல்கும் என்றும் கோரிக்கைகளை வென்றெடுக்கும் வரை தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் எடுத்துரைத்தனர்.

கர்நாடக மாநில மூத்த பொறியாளர் மற்றும் முன்னாள் தலைவர் இந்திய பொறியாளர் கூட்டமைப்பு பொறி.நாகராஜன் அவர்கள் தனது வாழ்த்துறையில் தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு எடுத்து வரும் அனைத்து நடவடிக்கைகளை பாராட்டியும், கர்நாடக மாநிலத்தில் தங்களது கோரிக்கைகளுக்காக தொடர்ந்து 34 நாட்கள் போராட்டத்தில் இறங்கியது குறித்தும், அதன் பயனாக கர்நாடக மாநிலத்தில் பொறியாளர்கள் எவருக்கும் பணி நீட்டிப்பு வழங்க்படவில்லை என்பதையும், தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய அவசியம் குறித்தும் எடுத்துரைத்தார்.

கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கீழ்க்கண்ட பொறியாளர்கள் கருத்துரை வழங்கினார்கள்.

1. **பொறி.P.கிருஷ்ணமூர்த்தி,** தலைவர், பொறியாளர் சங்கம், பொபது.
2. **பொறி.ஜெயந்தி,** பொதுச் செயலாளர், GCC
3. **பொறி.A.வெங்கடாசலம்,** தலைவர், நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம்
4. **பொறி.ஞான முருகன்,** பொறுப்பாளர், AEA பொறியாளர் சங்கம்
5. **பொறி.பிரகாஷ்,** தலைவர், ஊரக வளர்ச்சி துறை, உதவிப் பொறியாளர் நல சங்கம்
6. **பொறி.காந்தி,** பொறுப்பாளர், வீ.வ.வாரிய பொறியாளர் சங்கம்
7. **பொறி.நடராஜன்,** பொதுச் செயலாளர், TNSTC
8. **பொறி.குமரேசன்,** பொறுப்பாளர், தநாகுமா வாரியம்
9. **பொறி.சீனிவாசன்,** TWAD
10. **பொறி.செல்வகுமார்,** பொறுப்பாளர் TNSTC பொறியாளர் சங்கம்
11. **பொறி.P.கார்த்திகேயன்,** துணைத் தலைவர், உதவிப் பொறியாளர் சங்கம், பொ.ப.து
12. **பொறி.செல்வம்,** பொறுப்பாளர், ஊரக வளர்ச்சி பொறியாளர் சங்கம்
13. **பொறி.தீபக்,** பொதுச் செயலாளர், நெடுஞ்சாலைத் துறை பொறியாளர் சங்கம்
14. **பொறி.மதிமாறன்,** தமிழ்நாடு மின்சார வாரியம்
15. **பொறி.சசிதரன்,** TWAD Board
16. **பொறி.முத்துராமலிங்கம்,** தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்

பொறி.K.புனிதவேல் அவர்களது நன்றியுரையுடன் ஆர்ப்பாட்டம் மதியம் 2.00 மணியளவில் நிறைவுற்றது.

| | |
|---|---|
| **பொறி.S.ஆனந்த்,** | **பொறி.க.அன்பு** |
| தலைவர், | பொதுச் செயலாளர், |
| தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு | தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு |

15.2.2018 • சென்னை 13

ஊதிய உயர்வு அளிக்காததை கண்டித்து

# 5 ஆயிரம் பொறியாளர்கள் இன்று விடுப்பு எடுத்து போராட்டம்

## அரசு பணிகள் முடங்கும் அபாயம்

சென்னை, பிப்.15: ஏழாவது ஊதியக்குழுவில் ஊதிய உயர்வு அளிக்காததை கண்டித்து அரசின் பல்வேறு துறைகளை சேர்ந்த 5 ஆயிரம் பொறியாளர்கள் இன்று விடுப்பு எடுத்து போராட்டத்தில் கலந்து கொள்கின்றனர். இதனால், அரசு பணிகள் முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தமிழக அரசின் பொதுப்பணித்துறை, வேளாண் துறை, மின்வாரியம், போக்குவரத்துக் கழகம், குடிநீர் வாரியம் உள்பட பல்வேறு துறைகளில் 10,000க்கும் மேற்பட்ட பட்டதாரி பொறியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இவர்களுக்கு கடந்த 2009ல் ஒரு நபர் ராஜீவ் ரஞ்சன் கமிட்டி குறைந்தபட்ச ஊதியம் ரூ.15,600 வழங்க வேண்டும் என்று பரிந்துரைத்தது. அதன் அடிப்படையில் 2010 முதல் ஊதிய உயர்வு அமலுக்கு வந்தது. இந்த நிலையில் பொறியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் ரூ.15300 ஆக குறைக்கப்பட்டது. இதற்கு பொறியாளர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இதை தொடர்ந்து 2012ல் கிருஷ்ணன் தலைமையில் ஊதிய குழு கமிட்டி வைக்கப்பட்டது. இந்த கமிட்டி குறைந்த பட்ச ஊதியம் ரூ.9,300 ஆக குறைக்கப்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பொறியாளர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். அதன்பேரில், கிருஷ்ணன் கமிட்டியை பரிந்துரையை ரத்து செய்தது. இதை எதிர்த்து கடந்த 2013ல் தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்தது. தற்போது அந்த வழக்கு நிலுவையில் உள்ளது. இதை காரணம் காட்டி 7வது ஊதியக்குழுவில் சம்பள உயர்வு அளிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. இதனால், பொறியாளர்கள் பெரிதும் பாதிப்படைந்தனர்.

இந்த நிலையில், அரசு ஊழியர்களுக்கு வழங்கியது போல 2.57 மடங்கு ஊதிய உயர்வு தர வேண்டும் என்று முதல்வர் எடப்பாடி பழனிச்சாமியை தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு சந்தித்து மனு அளித்தனர். ஆனால், அந்த மனு மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த நிலையில், 7வது ஊதிய குழு திட்டத்தில் ஊதியம் மாற்றம் செய்ய வலியுறுத்தி இன்று சென்னை சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளிகை முன்பு பொறியாளர்கள் ஈடுபடுகின்றனர்.

இந்த போராட்டத்தில் நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணித்துறை, மின்வாரியதம், போக்குவரத்து, வேளாண் துறை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உட்பட 18 துறைகளை சேர்ந்த பொறியாளர்கள் கலந்து கொள்கின்றனர். இந்த போராட்டத்திங் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொறியாளர்கள் விடுப்பு எடுத்து கலந்து கொள்கின்றனர். இதனால், தமிழக முழுவதும் அரசு பணிகள் முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

நன்றி - தினகரன் : 15.02.2018

**15.02.2018 அன்று தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பின் சார்பில் சென்னை சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை அருகில் நடைபெற்ற கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் பத்திரிக்கைச் செய்திகள்**



12 • சென்னை 16.2.2018 தினகரன் கதம்பம்

ஊதிய உயர்வு அளிக்காததை கண்டித்து

# 5 ஆயிரம் பொறியாளர்கள் விடுப்பு எடுத்து போராட்டம்

**அரசு பணிகள் முடங்கியது**

சென்னை, பிப்.16: ஏழாவது ஊதியக்குழுவில் ஊதிய உயர்வு அளிக்காததை கண்டித்து அரசின் 18 துறைகளை சேர்ந்த 5 ஆயிரம் பொறியாளர்கள் நேற்று விடுப்பு எடுத்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், அரசு பணிகள் முற்றிலுமாக முடங்கியது.

தமிழக அரசின் பொதுப்பணித்துறை, வேளாண் துறை, மின்வாரியம், போக்குவரத்துக் கழகம், குடிநீர் வாரியம் உள்பட பல்வேறு துறைகளில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொறியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

இவர்களுக்கு கடந்த 2009ல் ஒருநபர் ராஜீவ் ரஞ்சன் கமிட்டி குறைந்தபட்ச ஊதியம் ரூ.15,600 வழங்க வேண்டும் என்று பரிந்துரைத்தது. அதன் அடிப்படையில், கடந்த 2010 முதல் ஊதிய உயர்வு அமலுக்கு வந்தது.

இந்நிலையில், திடீரென பொறியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் ரூ.15,300 ஆக குறைக்கப்பட்டது. இதற்கு பொறியாளர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். தொடர்ந்து, 2012ல் கிருஷ்ணன் தலைமையில் ஊதிய குழு கமிட்டி அமைக்கப்பட்டது. இந்த கமிட்டி குறைந்தபட்ச ஊதியம் ரூ.9,300 ஆக குறைத்து பரிந்துரைத்தது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, பொறியாளர்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். அதன்பேரில், கிருஷ்ணன் கமிட்டி பரிந்துரை ரத்து செய்யப்பட்டது.

இதை எதிர்த்து, கடந்த 2013ல் தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்தது. தற்போது அந்த வழக்கு நிலுவையில் உள்ளது.

இதை காரணம் காட்டி தற்போது 7வது ஊதியக் குழுவில் பொறியாளர்களுக்கு சம்பள உயர்வு அளிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. இதனால், பொறியாளர்கள் ஏமாற்றம் அடைந்தனர்.

இந்நிலையில், அரசு ஊழியர்களுக்கு வழங்கியது போல 2.57 மடங்கு ஊதிய உயர்வு தர வேண்டும் என தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமியை சந்தித்து தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பினர் மனு அளித்தனர். ஆனால், அந்த மனு மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, 7வது ஊதிய குழு திட்டத்தில் ஊதியம் மாற்றம் செய்ய வலியுறுத்தி நேற்று காலை 10 மணி முதல் சென்னை சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளிகை முன்பு பொறியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் நெடுஞ்சாலைத் துறை, பொதுப்பணித் துறை, மின்வாரியம், போக்குவரத்து, வேளாண் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை குடிநீர் வாரியம், ஊரக வளர்ச்சித்துறை, சென்னை மாநகராட்சி உட்பட 18 துறைகளை சேர்ந்த பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

அப்போது, 7வது ஊதிய குழுவில் சம்பளம் வழங்க கோரி கோஷம் எழுப்பினர். போராட்டத்தில் தமிழகம் முழுவதும் இருந்து 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொறியாளர்கள் விடுப்பு எடுத்து கலந்து கொண்டனர். இதனால், அரசு பணிகள் முற்றிலுமாக முடங்கியது.

குறிப்பாக, சென்னை எழிலகவளாகத்தில் உள்ள பொதுப்பணித்துறை அலுவலகம், கிண்டி நெடுஞ்சாலைத்துறை அலுவலகம், அண்ணா சாலையில் உள்ள மின்வாரிய அலுவலகங்களில் பெரும்பாலான பொறியாளர்கள் பணிக்கு வராததால் வெறிச்சோடி காணப்பட்டது.

**அடுத்தகட்ட போராட்டம் பற்றி 19ல் முடிவு**

போராட்டம் பற்றி தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு பொதுச் செயலாளர் அன்பு கூறும் போது, "போக்குவரத்து வாரியங்களில் பணியாற்றும் பொறியாளர்களுக்கு, அரசு துறை பொறியாளர்களுக்கு இணையான ஊதியம் வழங்க வேண்டும். 7வது ஊதிய குழு ஊதிய உயர்வு அமல்படுத்த வேண்டும் உட்பட 5 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்றி தரக்கோரி கடந்த சில தினங்களுக்கு முன்பு முதல்வர் எடப்பாடியை சந்தித்து வலியுறுத்தினோம். ஆனால், எங்களது மனு மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவேதான் போராட்டம் நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அடுத்தகட்டமாக, வரும் திங்கட்கிழமை பொறியாளர் கூட்டமைப்பு நிர்வாகிகள் கூட்டம் நடக்கிறது. இக்கூட்டத்தில் எங்களது அடுத்த கட்ட போராட்டம் குறித்து முடிவு செய்யப்படும்" என்றார்.

▶ தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு சார்பில் சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை அருகே நேற்று நடந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட நிர்வாகிகள்.

நன்றி - தினகரன் : 16.02.2018




சென்னையில்

## பொறியாளர் கூட்டமைப்பு ஆர்ப்பாட்டம்

சென்னை, பிப்.16–

தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு சார்பில் சென்னை சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை எதிரில் நேற்று ஆர்ப்பாட்டம் நடந்தது. கூட்டமைப்பு தலைவர் எஸ்.ஆனந்த் தலைமை தாங்கி பேசியதாவது:– ஒரு நபர் குழு பரிந்துரைத்து இன்றளவும் பெற்று வரும் ஊதியத்தின் அடிப்படையில் 7–வது ஊதியக் குழு ஊதியம் வழங்க வேண்டும். காலம் காலமாக இருந்து வந்தது போன்று போக்குவரத்துக் கழகங்கள், வாரியங்களில் பணியாற்றும் பட்டதாரிப் பொறியாளர்களுக்கு, அரசுத்துறைப் பொறியாளர்களுக்கு இணையான ஊதியம் வழங்க வேண்டும். காலமுறை பதவி உயர்வு வழங்குவதுடன், பொறியியல் சீராய்வுக்குழு அமைக்க வேண்டும். ஊரக வளர்ச்சித் துறையில் தலைமைப் பொறியாளர்கள் தலைமையில் முறையான பொறியியல் கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடக்கிறது. இதில் தமிழகம் முழுவதும் இருந்து பொறியாளர்கள் விடுப்பு எடுத்து போராட்டத்தில் பங்கேற்று உள்ளனர்.

இவ்வாறு அவர் பேசினார்.

பொதுச்செயலாளர் க.அன்பு, மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்த பொதுச்செயலாளர் சேன்சுரே உள்ளிட்ட பலர் பேசினர். தொடர்ந்து அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பாக அனைத்து நிர்வாகிகளுடன் (இன்று) சென்னையில் பொறியாளர்கள் ஆலோசனை நடத்துகின்றனர்.

நன்றி - தினத்தந்தி : 16.02.2018

## வாழ்வாதாரத்தை பறிக்கும் அரசாணையை எதிர்த்து பொறியாளர்கள் போராட்டம்

தீக்கதிர்



சென்னை,பிப்.15

ஒரு நபர் குழு பரிந்துரைத்து இன்றளவும் பெற்று வரும் ஊதியத்தின் அடிப்படையில் 7வது ஊதியக்குழு ஊதியம் வழங்க வேண்டும் என வலியுறுத்தி தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு சார்பில் சென்னை அரசு விருந்தினர் மாளிகை அருகில் வியாழனன்று (பிப்.15) மாபெரும் கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

காலங்காலமாக இருந்து வந்தது போன்று போக்குவரத்துக்கழகங்கள், வாரியங்களில் பணியாற்றும் பட்டதாரிப் பொறியாளர்களுக்கு அரசுத்துறைப் பொறியாளர்களுக்கு இணையான ஊதியம் வழங்கவேண்டும், காலமுறை பதவி வழங்க வேண்டும், பொறியியல் சீராய்வுக்குழு அமைக்க வேண்டும், ஊரக வளர்ச்சித்துறையில் தலைமைப் பொறியாளர்கள் தலைமையில் முறையான பொறியியல் கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்பன உள்ளிட்ட ஐந்து அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி அரசுத்துறைகள், வாரியங்கள், போக்குவரத்து கழகங்களில் பணியாற்றும் பட்டதாரிப் பொறியாளர்களுக்கான பொதுஅமைப்பாக விளங்கும் தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு மாநில அளவில் இந்த போராட்டத்தை நடத்தியது.

கூட்டமைப்பின் நிர்வாகிகள் பேசுகையில், அரசுத் துறைகளில் பணியாற்றும் பட்டதாரிப் பொறியாளர்களுக்கு 7வது ஊதியக்குழு ஊதிய விகிதங்கள் இதுவரை அமலாக்கப்படவில்லை. போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் பொறியாளர்களுக்கு அரசுத்துறைகளில் பத்தாம் வகுப்புக் கல்வித்தகுதி மட்டும் பெற்றவர்கள் வாங்கும் ஊதியத்தை விடக்குறைவாகவே உள்ளது. பொறியாளர்களுக்கிடையே பணிச்சுமையை நியாயமான வகையில் பகிர்ந்தளிக்க வைக்கப்பட்ட மறுசீரமைப்பு கோரிக்கை கேட்பாரற்றுக் கிடக்கிறது. ரூ 20 ஆயிரம் கோடிக்கு மேல் நிதி ஒதுக்கீடு பெறும் ஊரக வளர்ச்சித் துறையில் மத்திய அரசு கேட்டுக் கொண்டது போல் தலைமைப் பொறியாளர் பதவியை உருவாக்கி பொறியியல் கட்டமைப்பினை முறைப்படுத்த வேண்டும் என பலமுறை முறையிட்டும் அரசு நிர்வாகங்கள் செவிசாய்க்கவில்லை. சில துறைகளில், வாரியங்களில் தாங்கமுடியாத பணிச்சுமை வழங்கப்படுகிறது. குறிப்பாக ஊரக வளர்ச்சித்துறையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு மிகுந்த பணிச்சுமைக்காரணமாக ஏற்பட்ட மன அழுத்தத்தினால் 5 இளம் பொறியாளர்கள் இறந்தனர். பிற துறைகளில் இதைவிட நிலைமை மோசமாக உள்ளது.

எனவே பொறியாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வகையில் அரசாணை 328ஐ உடனே ரத்து செய்யவேண்டும் என்பதும் கோரிக்கைகள் குறித்து நிர்வாகிகளை அழைத்து அரசு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் எனவும் வலியுறுத்தி இந்த போராட்டம் நடப்பதாக கூறினர்.

போராட்டத்திற்கு கூட்டமைப்பின் தலைவர் எஸ்.ஆனந்த் தலைமை தாங்கினார். துணைத்தலைவர் என்.மதிமாறன், பொதுச்செயலாளர் கே.அன்பு, நிர்வாகிகள் எஸ்.பிரகாஷ், ஆர்.சீனிவாசன், பி.டி.வி.சுரேஷ்குமார், அகிலஇந்திய பொறியாளர் சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் செய்யது, முன்னாள் தலைவர்கள் நாகராஜ், சாங்கரி, நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்க நிர்வாகிகள் வெங்கடாச்சலம், தீபக் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர்.

நன்றி - தீக்கதிர் : 16.02.2018



அரசுத் துறைகளில் பணியாற்றும் பட்டதாரிப் பொறியாளர்களுக்கு 7-வது ஊதியக்குழுவை அமல்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை அருகே தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு சார்பில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டம். படம்: க.ஸ்ரீபரத்

## தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பினர் சென்னையில் ஆர்ப்பாட்டம்

■ சென்னை

ஏழாவது ஊதியக்குழு ஊதியத்தை வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு சார்பில் சென்னையில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, ஊரக வளர்ச்சித் துறை உள்ளிட்ட பல்வேறு அரசு துறைகளில் பணிபுரியும் பட்டதாரி பொறியாளர்கள் சங்கங்களை உள்ளடக்கிய தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு சார்பில் 5 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை அருகே நேற்று கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் தமிழகம் முழுவதிலும் இருந்து ஏராளமான பொறியாளர்கள் கலந்துகொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பின் தலைவர் ஆனந்த், பொதுச்செயலாளர் அன்பு ஆகியோர் கூறியதாவது:

அரசுத்துறைகளில் பணியாற்றும் பட்டதாரிப் பொறியாளர்களுக்கு ஏழாவது ஊதியக்குழு ஊதிய விகிதங்கள் அமல்படுத்தப்படவில்லை. வாரியங்களில் பணியாற்றும் பட்டதாரிப் பொறியாளர்களுக்கு ஆறாவது ஊதியக்குழு அமலாக்கத்தைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட ஒரு நபர் குழுவின் பரிந்துரைகள் ஏழாண்டுகளாகியும் இன்னும் அமலாகவில்லை. எனவே, ஒருநபர் குழு பரிந்துரைத்து இன்றளவும் பெற்றுவரும் ஊதியத்தின் அடிப்படையில் 7-வது ஊதியக் குழு ஊதியத்தை வழங்க வேண்டும்.

போக்குவரத்து கழகங்கள், வாரியங்களில் பணியாற்றும் பட்டதாரிப் பொறியாளர்களுக்கு அரசு துறை பொறியாளர்களுக்கு இணையான ஊதியம் வழங்க வேண்டும். காலமுறை பதவி உயர்வு, பொறியியல் சீராய்வுக் குழு அமைக்க வேண்டும். இந்த கோரிக்கைகள் குறித்து கூட்டமைப்பு நிர்வாகிகளை உடனே அழைத்துப் பேசி கோரிக்கைகளை நிறைவேற்ற அரசு முன்வர வேண்டும். அதுவரை இதுபோன்ற போராட்டங்கள் தொடரும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

நன்றி - தி ஹிந்து தமிழ்: 16.02.2018

## தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு ஆர்ப்பாட்டம்



சென்னை, பிப். 15– தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு, அரசுத் துறைகளிலும் மின்சார வாரியம், குடிநீர் வடிகால் வாரியம், குடிசை மாற்று வாரியம், வீட்டு வசதி வாரியம், மாசு கட்டுப்பாட்டு வாரியம் போன்ற வாரியங்களிலும், உள்ளாட்சி அமைப்புகளிலும், சென்னை மாநகராட்சி, காவலர் வீட்டு வசதிக் கழகம், போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் பட்டதாரிப் பொறியாளர்கள் சங்கங்களைத் தன்னகத்தே கொண்ட அமைப்பாகும்.

இக்கூட்டமைப்பு சார்பில் 7–வது ஊதிய குழு ஊதியம், காலமுறை பதவி உயர்வு, பொறியியல் சீராய்வுக்குழு உள்பட 5 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளிகை அருகில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

இதில் தமிழ்நாடு மூத்தப் பொறியாளர்கள் வீரப்பன், தாணுபிள்ளை, அப்பர்சாமி, அகில இந்தியப் பொறியாளர் கூட்டமைப்பின் தேசிய தலைவர்கள் சய்யது, பொதுச்செயலாளர்கள் சேன் சுரே, நாகராஜ், தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பின் தலைவர் ஆனந்த், பொதுச் செயலாளர் அன்பு உள்பட 5 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

நன்றி - மாலைமலர்: 15.02.2018




■ சென்னை, சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை அருகே, தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு சார்பில், பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, நேற்று கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடந்தது.

## பொறியாளர் கூட்டமைப்பு கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

சேப்பாக்கம், பிப். 16– தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு சார்பில், நேற்று, கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடந்தது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கூறியதாவது:

அரசுத்துறைகளில் பணியாற்றும் பட்டதாரிப் பொறியாளர்களுக்கு, ஏழாவது ஊதியக்குழு ஊதிய விகிதங்கள் அமலாகவில்லை.

போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் பொறியாளர்களுக்கு, 10ம்வகுப்பு கல்வித் தகுதியுடைய ஊழியர்களின் சம்பளத்தை விட குறைவு.

பொறியாளர்களுக்கிடையே, பணிச்சுமையை நியாயமான வகையில், பகிர்ந்தளிக்க வைக்கப்பட்ட மறுசீரமைப்புக் கோரிக்கை, கேட்பாரற்றுக் கிடக்கிறது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

நன்றி - தின மலர் : 15.02.2018

★ தினமணி சென்னை 3

## ஏழாவது ஊதியக் குழு சம்பளம் கோரி அரசுப் பொறியாளர்கள் போராட்டம்

சென்னை, பிப். 16: ஏழாவது ஊதியக் குழு திட்டத்தின்கீழ் ஊதியம் வழங்க வேண்டும் என அரசின் பல்வேறு துறைகளில் பணிபுரியும்பொறியாளர்கள் வலியுறுத்தியுள்ளனர். ஏழாவது ஊதியக் குழுவின் அடிப்படையில் ஊதிய உயர்வு அளிக்காததைக் கண்டித்து, தமிழக அரசின் பொதுப்பணித் துறை, மின் வாரியம், போக்குவரத்துத் துறை உள்ளிட்ட 18 துறைகளைச் சேர்ந்த 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொறியாளர்கள் சென்னையில் வியாழக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அரசுப் பொறியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியமாக ரூ.15,600 வழங்க வேண்டும் என, கடந்த 2009 -இல் ஒரு நபர் ஆணையம் பரிந்துரைத்தது. அதனடிப்படையில், கடந்த 2010 -ஆம் ஆண்டு முதல் ஊதிய உயர்வு அமலுக்கு வந்தது. இந்த நிலையில், திடீரென பொறியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் ரூ.15 ஆயிரமாகக் குறைக்கப்பட்டது. இதற்கு பொறியாளர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். மேலும் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

இதைக் காரணங்காட்டி, தற்போது ஏழாவது ஊதியக்குழுவில் பொறியாளர்களுக்கு சம்பள உயர்வு அளிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. இதனால், பொறியாளர்கள் ஏமாற்றம் அடைந்தனர்.

இதையடுத்து, ஏழாவது ஊதியக் குழு திட்டத்தின்கீழ் ஊதிய உயர்வு வழங்க வேண்டும், பொறியாளர்கள் சீராய்வு ஆணையத்தை அமைக்க வேண்டும், அரசு மருத்துவர்களுக்கு உள்ளதைப் போன்று பணி மேம்பாட்டுத் திட்டத்தை அரசுப் பொறியாளர்களுக்கும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, தமிழ்நாடு பொறியாளர்கள் கூட்டமைப்பு சார்பில் சென்னையில் வியாழக்கிழமை போராட்டம் நடத்தப்பட்டது. இதில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொறியாளர்கள் விடுப்பு எடுத்து பங்கேற்றனர். இதனால் அன்றைய தினம் அரசுப் பணிகள் பாதிக்கப்பட்டன.

நன்றி : தினமணி : 17.02.2018

## ENGIBEF PHASE IV – MODIFIED SCHEME

| ENGIBEF No. | Name & Address |
|---|---|
| 825 D | **Er.A.Dhavamani,** Assistant Executive Engineer, PWD, Construction Sub Division – Karur |
| 826 E | **Er.M.P.Saranya,** Assistant Engineer, Maintenance Section II, Karur |
| 827 E | **Er.T.U.Saranya,** Assistant Engineer, Construction Section II, Karur |
| 828 E | **Er.P.Sathiya Priya,** Assistant Engineer, Consctruction Section, Karur |
| 829 E | **Er.V.Manickavasagam,** Assistant Engineer, (Buildings) Construction & Maintenance Section, Karur |
| 830 E | **Er.P.Shanmugan**, Assistant Engineer, (B) Usilampatti, Periyakulam |
| 831 E | **Er.N.Sateesh Kumar,** Assistant Engineer, WRO, Irrigation Sec.II. Pongalur. |
| 832 E | **Er.K.Appusamy,** Assistant Executive Engineer, WRO, Aliyar Basin, Sub Division, Pollachi. |
| 833 E | **Er.V.Saravanan,** Assistant Engineer, WRO, Karaikudi |
| 834 E | **Er.K.Prakash,** Assistant Engineer, WRO, Manimuthar Basin Sub Division, Karaikudi |
| 835 E | **Er.Nagarajan,** Assistant Engineer, Buildings, Ponneri Sub Division, Ponneri |
| 836 E | **Er.R.Kumar,** Assistant Engineer, Ground Water Sub Division, Section-3 LPB Sub Division Compound, Konavaikal, Erode. |
| 837 E | **Er.S.Sharmila,** Assistant Engineer, Bhavani Basin Circle, Treasury Building, 3rd Floor, Erode. |
| 838 E | **Er.B.Sundaram,** Assistant Engineer, Thervoy Kandigai Project Division, Redhills, Tiruvallur. |

We request our member engineers who have not enrolled in ENGIBEF Phase IV Modified Scheme, kindly enroll as full-fledged member by remitting the amount through core banking system '**ENGIBEF, SBI, A/C No.10031641514 of PWD Complex Branch (Branch Code No.6489), Chennai**."

We solicit your earnest co-operation to enroll in this Scheme & assist the deceased Engineer's family.

### பாராட்டுக்கள்

கிளைச் சங்கப் பொறுப்பாளர்கள் அனைவருக்கும் பொறியாளர் நலநிதியில் நமது உறுப்பினர்களை சேர்த்ததற்கு பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

**JOIN ENGIBEF!** **JOIN ENGIBEF !** **JOIN ENGIBEF!**

**Er.S. Gopalakrishnan**
Treasurer / ENGIBEF

**Er.K. Karunanithi**
Secretary/ENGIBEF

# Wedding Greetings

| Bridegroom | Bride | Date & Venue |
|---|---|---|
| **T.Rajavarman,** B.E., | **Er.R.T.Ushavaishnavi,** B.E.<br>Assistant Engineer, PWD,<br>Tirunelveli | 28.01.2018 at<br>**"Rani Mahal"**<br>Perumalpuram, Tirunelveli |
| **K.Pranava Selvan,** B.E.,M.B.A., | **Preethi(a)P.Karthiga,** B.E<br>D/o.**Er.D.Panneerselvam,** M.E.<br>Executive Engineer, PWD,<br>Quality Control Division,<br>Chennai | 19.02.18 at<br>**S.M.G.Dhanalaxmi Mahal,**<br>Vandhavasi Salai,<br>Kancheepuram |
| **D.Sarathy,** B.Tech.,M.B.A.,(IIM) | **P.Gayathri(a)Kavya,** B.Sc., M.S.W.<br>D/o.**Er.S.Prabakaran,** B.E.<br>Executive Engineer, PWD,<br>IHH, Poondi | 04.02.18 at<br>**K.V.N. Kalyana Mandapam,**<br>Velappanchavadi,<br>Chennai – 77 |
| **K.Manikandan,** B.Tech., | **S.Banupriya,** M.E.<br>D/o.**Er.R.Selvam** B.E.<br>Chief Engineer, PWD,<br>(Retired) | 19.02.18 at<br>**Ramjan Mahal,**<br>Royapuram, Chennai |
| **R.Rathish,** B.E., | **R.Akalya,** M.E.,<br>D/o.**Er.V.Raju,** M.E., M.B.A., M.I.E.,<br>Executive Engineer, PWD<br>Thirumoorthy Division, Udumalpet | **"Reception"** on<br>03.03.18, Saturday 6.30 P.M<br>**"Muhurtham"** on<br>04.03.18, Sunday between<br>9.00 A.M to 10.30 A.M at<br>**Golden Mahal Thirumana Mandapam,** Karur Road, Erode |

***We wish them a happy & Prosperous Wedded Life*** ***-Editor***

## RETIREMENT ON 31.12.2017

| Sl. No. | Name | Designation |
|---|---|---|
| 1 | Er.M.Palanikumar | Chief Engineer |
| 2 | Er.R.Kaliraj | Superintending Engineer |
| 3 | Er.A.Gurusami | Assistant Executive Engineer |
| 4 | Er.S.Inmozhi | Assistant Executive Engineer |
| 5 | Er.S.Durai | Assistant Executive Engineer (Electrical) |

Vide G.O.(Rt.) No.679, Public Works (F1) Department, Dated 29.12.2017

**We wish them a happy, peaceful & active retired life** **- Editor**

## SPECIAL LEGAL FUND FOR PAY CASE

### Chennai Branch

| Sl.No | Name | Designation | Amount (Rs.) |
|---|---|---|---|
| 1. | Er.S.Prabakaran | EE | 5000 |
| 2. | Er.M.Magesh Nagarajan | AEE | 5000 |
| 3. | Er.M.Niraimathi | AEE | 5000 |
| 4. | Er.K.Punithavel | AEE | 3000 |
| 5. | Er.S.Indira | AE | 5000 |
| 6. | Er.K.Arut Selvi | AE | 5000 |
| 7. | Er.C.Prabakar | AE | 5000 |
| 8. | Er.S.Prempriya | AE | 5000 |
| 9. | Er.M.Arun Nehru | AE | 5000 |
| 10. | Er.P.Vinoth Kannan | AE | 5000 |
| 11. | Er.R.Silambarasan | AE | 5000 |
| 12. | Er.R.Rohini | AE | 5000 |

### Salem Branch

| Sl.No | Name | Designation | Amount (Rs.) |
|---|---|---|---|
| 1. | Er.V.Mani | SE | 5000 |
| 2. | Er.Sujatha | AEE | 5000 |
| 3. | Er.R.Jamuna Devi | AEE | 5000 |
| 4. | Er.P.Madhavishnu | AEE | 5000 |
| 5. | Er.A.Dhavamani | AEE | 2000 |
| 6. | Er.A.Parthiban | AEE | 5000 |
| 7. | Er.Doddurani | AE | 5000 |
| 8. | Er.C.Karthikeyan | AE | 5000 |
| 9. | Er.Arul | AE | 5000 |
| 10. | Er.Sathish | AE | 5000 |
| 11. | Er.M.P.Saranya | AE | 5000 |
| 12. | Er.T.U.Saranya | AE | 2000 |
| 13. | Er.P.Sathiya Priya | AE | 2000 |
| 14. | Er.V.Manickavasagam | AE | 2000 |

### Tharamani Branch

| Sl.No | Name | Designation | Amount (Rs.) |
|---|---|---|---|
| 1. | Er.R.Suryabharathi | AE | 5000 |

## Vellore Branch

| Sl.No | Name | Designation | Amount (Rs.) |
|---|---|---|---|
| 1. | Er.V.S.Sidharthini | AE | 5000 |
| 2. | Er.P.Santha Kumar | AE | 5000 |
| 3. | Er.M.Rajkumar | AE | 5000 |

**நன்றி! நன்றி!! நன்றி!!!**

சங்கத்தின் வழக்கு நிதிக்குப் பெருமளவில் நிதி வழங்கிவரும் உறுப்பினர்களுக்கும் முயற்சிகள் மேற்கொண்டுவரும் கிளைச் சங்கப் பொறுப்பாளர்களுக்கும் நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். - ஆசிரியர்

## SPECIAL CONTRIBUTION

| Sl.No | Name | Amount | Remarks |
|---|---|---|---|
| 1. | **Er.S.Prabakaran,B.E.,** Executive Engineer, PWD, IHH Poondi | 10,000 | On account of his daughter's Marriage |
| 2. | **Er.K.Karunanithi, B.E.,** Executive Engineer, PWD, Medical Division III, Chepauk, Chennai - 5 | 5,000 | On account of his daughter's Marriage |
| 3. | **Er.S.Gunasekaran, B.E.,** Superintending Engineer, PWD, Medical Circle, Chennai – 5 | 10,000 | On promotion of Executive Engineer to Superintending Engieer |

**We sincerely thank the above Engineers for their contribution. - Editor**

**பொறி.D.செல்வகாந்தி, B.E. பொபது உதவிப் பொறியாளருக்கு பாராட்டுக்கள்**

தமிழ்நாடு பொதுப்பணித்துறை, நீர்வள ஆதார துறை சார்பாக 23.01.2018 மற்றும் 24.01.2018 ஆகிய தேதிகளில் கேரள மாநிலம், திருவனந்தபுரத்தில் நடைபெற்ற பன்னாட்டு அணை பாதுகாப்பு கூட்டத்தில் கலந்து கொண்டு - "Integrated Flood Management For Existing Dams – **A Case Study Of Manimuktha Nadhi Dam In Villupuram District Of Tamilnadu"** – என்ற தலைப்பில் தொழில்நுட்ப கட்டுரை சமர்ப்பித்து "Ministry Of Water Resource C.W.C. Drip – New Delhi மூலம் **"EMINENT SPEAKER"** என்ற சான்றிதழை பெற்ற **பொறி.D.செல்வகாந்தி**, B.E. உதவிப் பொறியாளர், பொ.ப.து, நீ.ஆ.அ சிறப்பு திட்ட கோட்டம், கடலூர், அவர்களுக்கு சங்கத்தின் சார்பாக வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

- ஆசிரியர்

## கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் குறித்த எழுச்சி பாட்டுக்கள்

வா.. தோழா வா..
புறப்படு தோழா! புறப்படு!

…………………………………..
உரிமைகளை உணர்வுகளை, உடைமைகளை
இனியும் ஓர் நொடியும்!
எதற்காகவும், எந்த நேரமும், எவ்விடத்திலும்
விட்டுக்கொடுத்தல் வேண்டாமே!
……………………………………

உங்கள் அன்றாட வாழ்க்கை நன்றாக போகிறதென்றால்!
இயல்பு வாழ்க்கை நன்றாக போகிறதென்றால்!
நீங்கள் விழித்திருக்கும் போதுமட்டுமன்றி!
நீங்கள் உறங்கும்போதும்! உங்கள் நலன் காக்க
உறங்காமல்!
உழைத்துக்கொண்டிருக்கிறது ஓர் கூட்டம்! அது
பொறியாளர் என்னும் நெறியாளர் கூட்டமன்றி வேறில்லை!
வாழ்க்கை இயல்பாய்! இனிமையாய்! கழியும் நாட்களில்
இவன் உங்கள் நினைவிலும் வரமாட்டன்!
……………………………………

இவன் இயந்திரமாய் இயங்கிக்கொண்டே இருக்கிறான்!
ஒருநாளும் ஓய்ந்ததில்லை! ஓய்வெடுக்க
சாய்ந்ததுமில்லை! இருந்தும்
கர்ணனைப்போல் அவன் ஆற்றலையெல்லாம்!
அணு அணுவாய் சிதைத்துவிட்டு! இன்றோ
அவன் தன்மானம் காக்கும் ஊதிய
ஆடையையும் உருவிவிடப் பார்க்கின்றார்!

……………………………………

போராடுவோம்! வோராடுவோம்!
விட்டதை பிடிக்கும்வரை அல்ல!
பிடுங்கியதை திரும்பப்பெறும்வரை!

- **பொறி.பன்னீர்செல்வம்,** பொபது
(கவன ஈர்ப்பு போராட்டத்தில் முழக்கமிடப்பட்டது)

பொறியாளர்கள் எங்களின்
நெறிமுறை காக்க,
தன்மானம் காக்க,
தரணி எங்கும் முழக்கம் ஒலிக்க,
அவலங்களை அம்பலம் கொண்டுவர, கூடுடைத்து பறந்து,
சீர்மிகு சென்னையில்
எங்கள் கூட்டமைப்புப் பொறுப்பாளர்கள் தலைமையில்
அறைகூவல் விடுத்தோம்!

அரசே எங்களின் அரண் என்றுரைத்து,
கூவலிலும் ஒரு கண்ணியம்,
கண்டீரோ!
படும் துயர் உரைக்க
பல ஆயிரம் என குவிந்தோம்

அளவில்லாப் பணிகள்
365x24 என பணி யாருக்காவது
உண்டா?
மக்களின் நலன் கருதியதால்,
புயல், மழை என்றபோதிலும்,
பணியில் குறை என்று உண்டோ?
எங்கள் குறை கேட்க ஏன் செவிகள் இல்லை?

ஊன்றி நடக்கும் குச்சிகள் அல்ல நாங்கள்,
தூக்கி எறிவதற்கு!
நாட்டின் வளம் காக்க,
தூக்கமின்றி உழைக்கும் மறவர் படை,
நாங்கள்
குடிகளுக்கும், கோனுக்கும் - பாலம்!
எங்களின் சிறுமையைச் சொல்லி
வருந்துகிறோம்!

அரசே,
செவி சாய்ப்பீர்,
உங்கள் தளபதிகள் கம்பீரம்
உங்களது அல்லவா

அரசே,
செவி சாய்ப்பீர், எங்களின் ஒருமித்த குரலுக்கு!

**- பொறி.ஜெயக்குமார்,** த.நா.மி.வா

## Message on **"Demonstration"**

**Kudos TNEF,**

Concerted effort and a great achievement. The great unity achieved by the present team should not turn futile.

The journey should focus on the prospective legal, beaureacratic as well as agitation strategies, let's evolve further course of action.

- **Er.S.Appavoo,** Former President, TNEF

It is really a great show of strength in an excellent way. The co-ordination committee meetings conducted at seven centres has enthused every one of us and enduced us to assemble at Chepauk, Chennai yesterday to achieve our demands. The arrangements made are uncomparable and parent bodies of PWD & Highways Engineers Associations deserve our sincere commendation.

1. Thanks to all Parent bodies of all Association
2. Thanks to all who organized successful co-ordination meetings at all centres.
3. Thanks to all who led every team to our "Rome: and
4. Thanks to all engineers who spared a day and strengthened our hands.

The destination is very near and I firmly hope to reach at the earliest.

**Er.G.Balakrishnan,** Former General Secretary. TNEB Engineers Association

**பொறி.K.புனிதவேல்,** உதவிச் செயற்பொறியாளர், பொபது, போன்றவர்களின் ஒருங்கிணைப்பு, நிதானம், முதிர்ச்சி நமது வெற்றிக்கு அடித்தளம்! பாராட்டுக்கள்!!

**பொறி.அ.வெங்கடாசலம்,** தலைவர் நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம்

## உதவிச் செயற்பொறியாளர் பதவி உயர்வு குறித்து 2007ஆம் ஆண்டு உதவிப் பொறியாளர்களின் அவசர ஆலோசனைக் கூட்டம் 15.02.2018.

ஊதிய உயர்வு குறித்த கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் 15.02.2018 அன்று நடத்தப்பட்டது. ஆர்ப்பாட்டம் முடிந்த பின்பு 2007ஆம் ஆண்டு உதவிப் பொறியாளர்களுடன் ஆலோசனைக் கூட்டம் தலைமைச் சங்க அலுவலகத்தில் மாலை 3.30 மணியளவில் நடைபெற்றது. கிளைச் சங்கங்களிலிருந்து வந்திருந்த உதவிப் பொறியாளர்களில் பலர் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்றனர். இக்கூட்டத்தில் உதவிச் செயற்பொறியாளராக பதவி உயர்வு பெறுவது குறித்து விவாதிக்கப்பட்டது.

**கூட்டத்தில் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் கலந்துக்கொண்டனர்.**

1. பொறி.K.அன்பு, பொதுச் செயலளார், பொறியாளர் சங்கம்
2. பொறி.R.ஜெயக்குமார், தலைவர், உதவிப் பொறியாளர் சங்கம்
3. பொறி P.கிருஷ்ணமூர்த்தி, தலைவர், பொறியாளர் சங்கம்
4. பொறி.M.தனசேகரன், பொதுச் செயலாளர், உதவிப் பொறியாளர் சங்கம்
5. பொறி.S.செந்தில்குமார், உதவிப் பொறியாளர், காரைக்குடி கிளை
6. பொறி.S.தியாகராஜன், தலைவர் உதவிப் பொறியாளர் சங்கம், காரைக்குடி கிளை
7. பொறி.D.ராஜன், செயலர், உதவிப் பொறியாளர் சங்கம், பொள்ளாச்சி கிளை
8. பொறி.S.T.சாந்தகுமார், உதவிப் பொறியாளர், சேலம் கிளை
9. பொறி.S.ஜெகதீசன், உதவிப் பொறியாளர், கடலூர் மற்றும் விழுப்புரம் கிளை
10. பொறி.N.ஜெயக்குமார், உதவிப் பொறியாளர், பொள்ளாச்சி கிளை
11. பொறி.C.பொன்ராஜ், உதவிப் பொறியாளர், விருதுநகர் கிளை
12. பொறி.K.மாரிமுத்து, உதவிப் பொறியாளர், பொள்ளாச்சி கிளை
13. பொறி.M.ஜெயக்குமார், உதவிப் பொறியாளர், ராமநாதபுரம் கிளை
14. பொறி.N.சதீஷ்குமார், உதவிப் பொறியாளர், பொள்ளாச்சி கிளை
15. பொறி.D.இராதா கிருஷ்ணன், உதவிப் பொறியாளர், மதுரை கிளை
16. பொறி.M.கார்த்திகேயன், உதவிப் பொறியாளர்
17. பொறி.J.முத்துராமலிங்கம், செயலர், உதவிப் பொறியாளர் சங்கம் , காரைக்குடி கிளை
18. பொறி.D.ஜெயக்குமார், தலைவர் உதவிப் பொறியாளர் சங்கம், பொள்ளாச்சி கிளை
19. பொறி.C.பாலமுருகன், பொருளாளர், பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் சங்கம் , காரைக்குடி கிளை
20. பொறி.K.பாஸ்கரன், உதவிப் பொறியாளர், காங்கேயம்
21. பொறி.K.முகிலன், உதவிப் பொறியாளர்
22. பொறி.M.மணிமாறன், உதவிப் பொறியாளர், சென்னை கிளை
23. பொறி.E.P.விக்னேஷ்வரன், உதவிப் பொறியாளர், மதுரை கிளை
24. பொறி.D.செல்வகாந்தி , உதவிப் பொறியாளர், கடலூர் மற்றும் விழுப்புரம் கிளை
25. பொறி.R.கனகராஜ், உதவிப் பொறியாளர், கடலூர் மற்றும் விழுப்புரம் கிளை

விவாதத்தில் பதவிஉயர்வு பட்டியலின் தற்போதைய நிலை, ஊட்டுப்பதவி (Feeder Category), பெயர் மாற்றம் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களாக இருந்து விதிகளுக்கு புறம்பாக பதவி உயர்வு பெற்று உதவிப் பொறியாளர்களாக பதவியில் உள்ளவர்கள் என பல்வேறு பிரிவினரின் நிலைகுறித்து உறுப்பினர்களுடன் விவாதிக்கப்பட்டது.

பின்னர் கீழ்க்கண்ட ஆலோசனைகள் நடைமுறைப்படுத்த விவாதிக்கப்பட்டது.

1. அடிப்படை விதிகளுக்கு புறம்பாக பதவி உயர்வு பெற்ற 21 தொழில்நுட்ப உதவியாளர்களை பணி இறக்கம் செய்ய சொல்லி உயர்நீதிமன்ற உத்தரவிற்கு "Status quo" ஆணையின்படி அவர்கள் தன் நிலையில் மாற்றம் இல்லாத நிலையில் பதவி உயர்வு பட்டியில் அவர்கள் இடம் பெற இயலாது என்பதனை சுட்டிக்காட்டவேண்டும்.

2. அரசாணை எண்.155, நாள் 13.08.2015க்கு நீதிமன்ற தடையாணை உள்ளதால் உதவிப் பொறியாளராக பதவி மாற்றம் பெற்ற தொழில்நுட்ப உதவியாளராக பதவி உயர்வு பட்டியலில் இடம் பெற இயலாது என்பதனை சுட்டிக்காட்ட வேண்டும்.
3. மேற்கண்ட பணிகளை சட்ட விதிகளுக்கு உட்பட்டு விரைந்து முடிக்கவும், தற்போது உள்ள எண்ணிக்கை பட்டியல் காலாவதி ஆவதற்குள் பதவி உயர்வு பெற விரைந்து முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) தலைமைப் பொறியாளர் (பொது) அவர்கள் விரைவுபடுத்த வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டது.

கூட்டம் அவசியம் கருதி உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு இணங்க முன் அறிவிப்பின்றி நடந்தாலும் உறுப்பினர்களின் சந்தேகங்கள் மற்றும் ஐயப்பாடுகளை தீர்த்து, விரைந்து பதவி உயர்வு பெறத் தேவையான சாத்தியக்கூறுகளை ஆராயும்படி கேட்டுக்கொண்டு, கூட்டம் மாலை 5.30 மணியளவில் நிறைவுற்றது.

மிக்க அன்புடன்...

**பொறிஞர். மு. தனசேகரன்**
பொதுச் செயலாளர், உதவிப் பொறியாளர் சங்கம்

**பொறிஞர். க. அன்பு**
பொதுச் செயலாளர், பொறியாளர் சங்கம்

---

## பொறியாளர் உறுப்பினர்களுக்கு அன்பான வேண்டுகோள்!

பொறியாளர் நலநிதி (ENGIBEF) மேம்படுத்தப்பட்ட நான்காம் (Modified Phase IV) திட்டத்தில் இதுவரை உறுப்பினர்களாக சேராதவர்கள் விரைவில் உறுப்பினர்களாகச் சேர்ந்து பொறியாளர் நலநிதியின் நிதி ஆதாரத்தை மேம்படுத்துங்கள். 2000 பேர் உள்ள நமது சங்கத்தில் சுமார் 800 பொறியாளர்களுக்கு சற்று கூடுதலாக மட்டுமே **Modified Phase IV** இல் உறுப்பினர்களாக சேர்ந்து உள்ளனர். இந்த மாதம் 14 பேர் உறுப்பினர்களாக சேர்ந்திருப்பது வரவேற்க்கத்தக்கது.

**மேலும், 10.03.2018 வேலூரில் நடைபெறும் நமது மாநில மைய செயற்குழு கூட்டத்திற்கு முன்பு அதிக உறுப்பினர்களை, கிளைச் சங்க உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பொறியாளர் நலநிதி மேம்படுத்தப்பட்ட நான்காம் திட்டத்தில் உறுப்பினர்களாக சேர்க்கும் கிளைச்சங்கப் பொறுப்பாளர்களுக்கு பாராட்டும் பரிசும் வழங்கப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.**

பொறியாளர் நலநிதியில் சேர்ந்திடுவோம்!

பாதிக்கப்பட்ட நமது பொறியாளர் குடும்பத்திற்கு பலனை இன்னும் கூடுதலாக வழங்கி உதவிடுவோம்!

இறந்த பொறியாளர்கள் குடும்பத்திற்கு உதவிடுவோம்!

**JOIN ENGIBEF!** **JOIN ENGIBEF!** **JOIN ENGIBEF!**

**பொறி.S.கோபாலகிருஷ்ணன்**
பொருளாளர், பொறியாளர் நலநிதி

**பொறி.K. கருணாநிதி**
செயலாளர், பொறியாளர் நலநிதி

## CENTRAL EXECUTIVE COMMITTEE MEETING CIRCULAR

**Dear Engineer,**

- The Combined Central Executive Committee Meeting of Association of Engineers and Assistant Engineers Association, TNPWD, Chennai.5 is proposed to be held at **Vellore Branch, Vellore on 10.03.2018 (Saturday) at 10.35 AM** to discuss the following Subjects.

1. VII$^{th}$ Pay Commission – Course of action
2. Recruitment of AEs (Civil and Electrical).
3. Promotion in respect of 2007 batch Assistant Engineers.
4. Court Cases.
5. Financial position of Association.
6. Construction of Poriyaalar Ramalingam Illam at Chennai
7. Enhancement of Financial & Administrative Power of our Engineers
8. Any other Subjects raised by the members.

- **All the Central Executive Committee Members of AOE & AEA are requested to make it convenient to attend the above meeting and offer their candid views for the betterment of our Association**.

**Er.M.DHANASEKARAN**
General Secretary, AEA

**Er.K.ANBU**
General Secretary, AOE

**To**

All Parent body Office bearers of AOE & AEA and President, Secretary & Treasurers of all branches of AOE & AEA.

**Note :** 1) Those who want accommodation shall inform to the Secretary, AOE & Secretary, AEA **Vellore Branch** as follows

**Er.M.Palani,BE,**
Secretary, AOE
Asst. Executive Engineer, PWD
Buildings Construction Maintenance Sub Division
Gudiyatham,
**Vellore Dist.**
**Cell No: 9443032658**

**Er.K.Panneerselvam, M.E.,**
Secretary/AEA
Assistant Engineer, PWD,
No.23, First Main Road,
Mullai Nagar, Bagayam,
**Vellore-632 002**
**Cell No: 9751808688**

**Note :Venue at Vellore will be announced later**

## Tamil Nadu Engineers Federation, Chennai & Vellore Regional General Meeting held on 11.02.2018


Er.A.Veerappan


Er.P.Krishnamoorthy


Er.K.Anbu


Er.K.Murugan


Er.R.Jeyakumar


Er.N.Suresh Babu


Er.C.Balamurugan


Er.K.Punithavel


Er.M.Suganthi


Er.K.Panneerselvam


Views of Gathering




Views of Gathering

RNI No.TNBIL / 2010 / 35983

| Regd. News Magazine | Date of Publication: Third Week of Every month | தனி பிரதி - ரூ.10/- |
|---|---|---|

PORIYALAR, Egmore RMS / 1 Patrika, Chennai Reg. No.T.N. / CH (C) / 307 / 18 - 20
Posted on : 22.02.2018, Licensed to Post without prepayment under WPP No.TN/PMG(CCR), WPP No.340/18-20




21.01.2018 அன்று தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பின் சார்பாக கோய்ம்புத்தூரில் நடைபெற்ற மண்டல ஒருங்கிணைப்பு கூட்டம்




10.02.2018 அன்று தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பின் சார்பாக சேலத்தில் நடைபெற்ற மண்டல ஒருங்கிணைப்பு கூட்டம்




11.02.2018 அன்று தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பின் சார்பாக சென்னையில் நடைபெற்ற மண்டல ஒருங்கிணைப்பு கூட்டம்

Printed by : Mr.S.G.PARTHASARATHY, and Published by : Er.C.BALAMURUGAN, M.E., PGDFE., on behalf of Association of Engineers, PWD from Association of Engineers, PWD, PWD Campus, Chepauk, Chennai - 5, and Printed at : V.P.S. Printers, 292, Triplicane High Road, Triplicane, Chennai - 5, and Published at Association of Engineers, PWD, PWD Campus, Chepauk, Chennai - 5, Editor : Er.K.ANBU, M.E.